# வானவில்

VAANAVIL
ISSUE – 58 OCTOBER 2015

இதழ் - 58 ஐப்பசி 2015


# தமிழக மீனவர்களின் சூறையாடலில் இருந்து எமது மீனவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும்!




அண்மையில் இலங்கை நாடாளுமன்றத்தில் நாட்டின் வட பகுதியில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் தமிழக மீனவர்களின் நடவடிக்கை பற்றிய விவாதம் நடைபெற்றது. இதன்போது இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக எதிர்க்கட்சிகள் சில அபிப்பிராயங்களை முன் வைத்தன.

பெயரளவில் சம்பிரதாயபூர்வமான எதிர்க்கட்சியாக இருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கருத்துத் தெரிவிக்கும்போது, 'இலங்கை – இந்திய கடற்படைகள் கூட்டாக ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுவதன் மூலம், இருநாட்டு மீனவர்களும் மற்றவர்களது கடற்பிரதேசத்தில் ஊடுருவுவதைத் தடுக்கலாம்' என்ற கருத்தை முன்வைத்தார்.

உண்மையான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரான வாசுதேவ நாணயக்கார பேசும்போது, 'இந்தப் பிரச்சினையை இலங்கை சர்வதேச அரங்கில் எழுப்ப வேண்டும்' என்ற கருத்தை முன்வைத்தார்.

ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினரான விஜித ஹெரத் இதுபற்றிக் கருத்துத் தெரிவிக்கையில், தமிழக மீனவர்களின் ஊடுருவலைத் தடுக்க கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், மீன்பிடிப் படகு முதலாளிகளிடம் கூலிக்காக வேலை செய்யும் சாதாரண ஏழை மீனவர்களைக் கைது செய்வதை விடுத்து, ஊடுருவும் படகுகளைப் பறிமுதல் செய்ய வேண்டும் என்றும் கூறினார். அத்துடன் வாரந்தோறும் சராசரியாக சுமார் 1,500 வரையிலான தமிழகப் படகுகள் இலங்கைக் கடற்பரப்பினுக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடிப்பதாகவும் சுட்டிக் காட்டினார்.

தமிழக மீனவர்களின் ஊடுருவல் பிரச்சினை என்பது இன்று நேற்று ஏற்பட்ட ஒரு பிரச்சினை அல்ல. இலங்கை சுதந்திரம் பெற்ற 1948இல் இருந்து இந்தப் பிரச்சினை இருந்து வருகிறது. அதில் ஒரு வேறுபாடு என்னவெனில், இலங்கையில் தமிழ் ஈழத்துக்கான ஆயுதம் தாங்கிய போராட்டம் ஆரம்பித்த பின்னர், அது கூடுதலாகத் தீவிரமடைந்திருக்கிறது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் தரை மார்க்கமான எல்லைகள் இல்லை. அதனால் இந்தியாவுக்கு அதன் ஏனைய அண்டை நாடுகளுடன் இருப்பது போன்ற எல்லைப் பிரச்சினைகள் எதுவுமில்லை. ஆனால் வரலாறு விட்டுச் சென்ற ஒரு பிரச்சினை இருந்தது. அது மலையகத்தில் தமது பெருந்தோட்டங்களில் வேலை செய்வதற்கென பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்களினால் தென்னிந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட தமிழ் தொழிலாளர்களின் பிரச்சினையாகும். ஆனால் அது இலங்கையில் திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்க பிரதமராக இருந்த இரண்டு சந்தர்ப்பங்களில் சிறீமாவோ — சாஸ்திரி ஒப்பந்தம், சிறீமாவோ – இந்திரா ஒப்பந்தம் என்பனவற்றின் மூலம் பெரும்பாலும் பூரணமாகத் தீர்க்கப்பட்டுவிட்டது. (இலங்கையில் தமிழ் – சிங்கள இனங்களுக்கிடையிலான பிரச்சினையும் இதே பிரித்தானிய காலனித்துவவாதிகளால் திட்டமிட்ட

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...

நூறு சிந்தனை மலரட்டும்

# வடமாகாண இனச்சுத்திகரிப்பு 25 வருடங்கள்

பேரினவாத ஒடுக்குமுறையும் அதற்கெதிரான போராட்டமுமே, 1948இல் இலங்கை சுதந்திரமடைந்த பின்னரான இலங்கையின் பிரதான பிரச்சனையென்று முதன்மைப்படுத்தி பேசுபவர்கள் இலங்கையின் எல்லா இன மக்களின் மீதும் கரிசனை கொண்டவர்களல்ல. அத்துடன் இவர்கள் சுதந்திரமடைய முன்னர் (பிரித்தானியக் காலனியாதிக்கத்தில்) நிலவிய மக்களுக்கிடையேயான பிணக்குகள், முரண்பாடுகள் பற்றி முழுமையாக ஆராய்ந்தும் பார்ப்பதில்லை. அதாவது அக்காலத்தில் நிகழ்ந்த சிங்கள–முஸ்லீம் இனவன்செயல்கள் மற்றும் சாதிக்கலவரங்கள் பற்றி எதுவுமே தெரியாதவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் திருப்பித்திருப்பி சொல்வதெல்லாம், 1956 ஆண்டில் கொண்டுவரப்பட்ட தனிச்சிங்களச் சட்டம் 1958, 1977, 1983 ஆண்டுகளில் நிகழ்ந்த தமிழ்–சிங்கள இனவன்செயல்கள், சிங்களக்குடியேற்றம், தரப்படுத்தல், கடைசியாக 2009இல் முள்ளிவாய்க்காலில் முடிவுற்ற யுத்தம் என்பனவேயாகும். இவற்றினை வரிசைப்படுத்துவதோடு நிறுத்தாது, இவையெல்லாவற்றிற்கும் இலங்கை (சிங்கள) அரச தரப்பினரை ஒரேயடியாகக் குற்றஞ்சாட்டுவதிலேயே முனைப்பாக உள்ளனர். இக்காலகட்டத்தில் தமிழர் தரப்பில் நிகழ்த்தப்பட்ட பாரிய அரசியல் தவறுகள்பற்றி ஒருபோதுமே வாய்திறந்து பேசியது கிடையாது.

இலங்கையின் வரலாற்றில் மிகப்பெரிய இனச்சுத்திகரிப்பாகிய, வடமாகாணத்திலிருந்து புலிகளால் ஆயத முனையில் 75000 மேற்பட்ட முஸ்லீம்கள் பலாத்காரமாக வெளியேற்றப்பட்டு 25 வருடங்களாகின்றன. புலிகளின் இந்த இனச்சுத்திகரிப்பு, 1990 ஒக்ரோபர் 15ல் சாவகச்சேரியில் வாழ்ந்த முஸ்லிம்களை வெளியேற்றுவதில் ஆரம்பித்தது. பின்னர் கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்டங்களில் வாழ்ந்த முஸ்லீம்கள் வெளியேற்றப்பட்டனர். ஒக்ரோபர் 30ல் யாழ்ப்பாணம் நகரத்திலுள்ளவர்களின் வெளியேற்றத்துடன் இது முடிவுக்கு வந்தது. யாழ்ப்பாணத்தைவிட்டு வெளியேறுவதற்கு அவர்களுக்கு 2 மணித்தியால அவகாசமே வழங்கப்பட்டது. வெறும் அந்த 2 மணி நேரத்தில் தங்களால் முடிந்த பெறுமதிமிக்க பொருட்களை பொட்டலங்களாகக்கட்டி அவர்கள் எடுத்துச்செல்ல முற்பட்டபோது, புலிகள் அதனை அனுமதிக்கவில்லை. அத்துடன் முஸ்லீம் பெண்கள் அணிந்திருந்த சகல நகைகளும் உருவி எடுக்கப்பட்டன. ஒவ்வொருவருக்கும் 150 ரூபாய் பணமும் ஒரு மாற்று உடுப்புமே எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்பட்டது.

வடமாகாணத்திலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களில் பெரும்பாலானவர்கள் புத்தளம் மாவட்டத்தில் தற்காலிகமாக குடியமர்ந்தார்கள். மேலும் ஒரு பகுதியினர் வவுனியா, நீர்கொழும்பு, கொழும்பு, அனுராதபுரம், குருநாகல், கம்பஹா, மாத்தளை மற்றும் கண்டி ஆகிய இடங்களுக்கு இடம்பெயர்ந்தார்கள். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த முஸ்லிம்கள் பெருமளவில் வெளிநாடுகளுக்கு அகதிகளாகச் சென்றார்கள். 1996 ஆண்டில் யாழ்ப்பாணம் இலங்கை அரச படைகளின் முழுமையான கட்டுப்பாட்டிற்கு கொண்டுவரப்பட்ட போதும் 2009இல் புலிகளுடான யுத்தம் முடிவுக்கு வந்த பின்னரும் வடமாகாணத்தில் எதுவித அச்சமின்றி முஸ்லீம்கள் மீளக்குடியேறும் நிலை உருவாகியுள்ளது.

இந்த இனச்சுத்திகரிப்பு நடப்பதற்கு இருமாதங்களின் முன்னர், புலிகள் காத்தான்குடி (03.08.1990), ஏறாவூர் (11.08.1990) பள்ளிவாசல்களில் புகுந்து காட்டுமிராண்டித்தனமான படுகொலைகளை நடத்தினார்கள். கிழக்குமாகாணத்தில் புலிகளுக்கும் முஸ்லீம்களுக்கும் ஏற்பட்ட முறுகல் நிலையே இந்த பள்ளிவாசல்களில் நடந்த படுகொலைகளுக்கும் வடமாகாணத்திலிருந்து முஸ்லீம்கள் வெளியேற்றப்பட்டதற்கும் காரணம் என்று கூறப்படுகின்றது. இதன் காரணமாகத்தான் கிழக்குமாகாணத்தின் அப்போதைய அரசியல் பொறுப்பாளர் கரிகாலனின் மேற்பார்வையிலேயே வடமாகாணத்திலிருந்து முஸ்லீம்கள் வெளியேற்றப்பட்டதாக கூறப்படுகின்றது.

முஸ்லீம்கள் வெளியேற்றப்பட்டு 5 வருடங்களின் பின்னர், புலிகள் யாழ் குடாநாட்டின் வலிகாமம் பகுதியில் வாழ்ந்த மக்களை வெளியேற்றியதும் மறக்கக்கூடியதல்ல. 1995 ஆண்டில் யாழ்ப்பாணக் குடாநாட்டை முழுமையாக இலங்கை இராணுவம் கைப்பற்ற முயலுகையில், வன்னியை நோக்கிய இடப்பெயர்வை திட்டமிட்ட புலிகள், மக்களிடையே பீதிப்புரளியைப் பரப்பி, பல இலட்சக்கணக்கான மக்களை ஒக்டோபர் 30ந் திகதி மனிதக்கேடயங்களாக கால்நடையாக தென்மராட்சி நோக்கி அழைத்துச் சென்றார்கள்.


வடக்குக்கிழக்கில் வாழ்ந்த முஸ்லீம்களுக்கு எதிராக புலிகள் மிகக்கொடூரமான நடவடிக்கைகள் பலவற்றை செய்தபோதும், முஸ்லீம்கள் ஒருபோதுமே சாதாரண தமிழர்கள்மீது விரோதம் பாராட்டியதில்லை. அதற்கு காரணம் தமக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட சகல அநீதிகளுக்கும் புலிகளே காரணம் என்பதில் அவர்கள் தெளிவாகவுள்ளார்கள். ஆனாலும் வடக்குக்கிழக்கு மற்றும் மலையக தமிழ் மக்களைப்போலவே, சரியான அரசியல் கருத்துக்களை முன்வைத்து தங்கள் மக்களுக்காக அணிதிரளாமல் இருக்கிறார்கள். பெரும்பாலான அவர்களது பாராளுமன்ற அரசியல் தலைமைகள் எப்போதுமே ஐக்கிய தேசியக்கட்சி சார்பு நிலையே எடுத்து வருவதால், பெரும்பாலான முஸ்லீம்கள் ஐ.தே.கவை ஆதரிப்பவர்களென்ற தோற்றப்பாடே இருக்கின்றது. அண்மைக்காலமாக தமிழர் தரப்பில் ஒலித்துக்கொண்டிருக்கும் இலங்கையில் நடந்த மனித உரிமை மீறல்களை விசாரிக்க வேண்டுமென்ற கோரிக்கையில், முஸ்லீம்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளும் விசாரிக்கப்பட வேண்டும் என்பது சேர்க்கப்பட வேண்டும் என்பது பலமாக எழாதது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும். *

**வானவில்**

**தொடர்பு முகவரி:** ‘வானவில்’ இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
sunvaanavil@gmail.com

இதுவரையில் வெளிவந்த வானவில் இதழ்களை **http://manikkural.wordpress.com/** என்ற இணையத்தள முகவரியில் வாசிக்கலாம்.

# இடதுசாரிக் கட்சிகள் அவசியமாகக் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள்!


டியு குணசேகர


பேராசிரியர் திஸ்ஸ விதாரண


வாசுதேவ நாணயக்கார


சந்திரசிறீ கஜதீர

இலங்கையில் இடதுசாரிகளுக்கு மீண்டும் ஒரு போதாத காலம் ஏற்பட்டுள்ளது.

ஆகஸ்ட் 17இல் நடந்து முடிந்த பாராளுமன்ற பொதுத்தேர்தலின் போது, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலிருந்து (ஐ.ம.சு.கூ) தேர்தல் ஆணையாளரிடம் கையளிக்கப்பட்ட தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பட்டியலிலிருந்து கம்யூனிஸ்ட் கட்சி பொதுச் செயலாளர் டியு குணசேகரவினதும், லங்கா சமசமாஜக் கட்சிப் பொதுச் செயலாளர் பேராசிரியர் திஸ்ஸ விதாரணவினதும் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 1994இல் மீண்டும் ஆட்சிபீடம் ஏறியதிலிருந்து ஒவ்வொரு தேர்தலின்போதும் இவ்விரு இடதுசாரிக் கட்சிகளுக்கும் தேசியப்பட்டியலில் இடம் வழங்கப்பட்டு வந்த 20 ஆண்டுகால நடைமுறை இதன் மூலம் மாற்றப்பட்டுள்ளது. சிறீலங்கா சுதந்திரக் கட்சியினதும் (சிறீ.ல.சு.க.) ஐ.ம.சு.கூவினதும் தலைமையை மைத்திரிபால சிறிசேன — சந்திரிக வலதுசாரி அணி கைப்பற்றியதின் விளைவே இந்த மாற்றத்துக்கான காரணம்.

அதன் காரணமாக, தற்போதைய பாராளுமன்றத்தில் மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்பட்ட ஜனநாயக இடதுசாரி முன்னணித் தலைவர் வாசுதேவ நாணயக்காரவும், கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் தெரிவு செய்யப்பட்ட சந்திரசிறீ கஜதீரவும் மட்டுமே இடதுசாரி பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்கப் போகிறார்கள்.

1964ல் முதன்முதலாக லங்கா சமசமாஜக் கட்சி திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தில் இணைந்து, அக்கட்சியின் தலைவர் டாக்டர் என்.எம்.பெரோரா நிதி அமைச்சராகவும் பொறுப்பேற்றார். ஆனால் அதற்கு முன்னரே சிறீமாவோவின் கொலை செய்யப்பட்ட கணவரான எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கவின் அரசின் ஏகாதிபத்திய விரோதக் கொள்கைகளை (நடவடிக்கைகளை) சமசமாஜக் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் ஆதரிக்கத் தொடங்கியிருந்தன.

அன்றிலிருந்து சுதந்திரக் கட்சிக்கும் இடதுசாரிக் கட்சிகளுக்குமான உறவுகள் படிப்படியாக வளர ஆரம்பித்தன. 1965 பொதுத் தேர்தலின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையில் ஏழு கட்சி கூட்டரசாங்கம் அமைந்த பின்னர், சுதந்திரக் கட்சியும் இரண்டு இடதுசாரிக் கட்சிகளான கம்யூனிஸ்ட் கட்சியும், சமசமாஜக் கட்சியும், ஒரு பொதுவான ஐக்கிய முன்னணியின் கீழ் செயற்படத் தொடங்கின. ஆனால் இந்த முன்னணி பாராளுமன்றத் தேர்தலை மட்டும் இலக்கு வைத்து அமைந்திருந்ததுடன், சுதந்திரக் கட்சியே அதன் தலைமைக் கட்சியாகவும் இருந்தது.

1970 பொதுத் தேர்தலின் போது இந்த மூன்று கட்சிகளும் சேர்ந்து உருவாக்கிய 'மக்கள் கூட்டணி' (Peoples Alliance) மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்று ஆட்சி அமைத்தது. இடதுசாரிக் கட்சிகளின் தலைவர்களுக்கு அந்த அரசாங்கத்தின் பிரதமரான சிறீ.ல.சு.க. தலைவி சிறீமாவோ பண்டாரநாயக்க முக்கியமான அமைச்சுப் பொறுப்புகளையும் வழங்கினார்.

ஆனால் 1977 தேர்தலுக்கு முன்னதாக சிறீ.ல.சு.கவுக்கும் இடதுசாரிக் கட்சிகளுக்கும் இடையே கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டு, இடதுசாரிகள் அரசாங்கத்தை விட்டு வெளியேறியதினால், இரு பகுதியினரும் தனித்தனியாகப் போட்டியிட்டுத் தோல்வி கண்டனர்.

அந்தத் தோல்வியிலிருந்து கற்ற பாடங்கள் காரணமாக இரு பகுதியினரும் மீண்டும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு என்ற அமைப்பில் இணைந்து செயற்படத் தொடங்கினர். அதன் காரணமாக 1994இல் அந்தக் கூட்டமைப்பு

பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது. சந்திரிக பிரதமரானார்.

அதன் பின்னர் நடைபெற்ற எல்லா ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களிலும் சிறீ.ல.சு.கவும், இடதுசாரிக் கட்சிகளும் ஒன்றிணைந்தே தேர்தல்களைச் சந்தித்ததால், சுலபமாக வெற்றிபெற முடிந்தது. அதிலிருந்து ஒன்று தெளிவானது. அதாவது சிறீ.ல.சு.கவும் இடதுசாரிக் கட்சிகளும் ஒன்றிணைந்தாலே ஐக்கிய தேசியக் கட்சியைத் தோற்கடிக்க முடியும் என்ற உண்மை பட்டவர்த்தனமாகத் தெரிந்தது. ஆனால் இப்பொழுது நிலைமை தலைகீழாக மாறியுள்ளது.

இந்தக் கட்டத்தில் தமது தவறுகள் என்ன என்பதையும், எதிர்காலத்தில் தாம் எப்படிச் செயல்பட வேண்டும் என்பதையும் இடதுசாரிக் கட்சிகள் சிந்திப்பது அவசியமானது. இந்த விடயங்கள் மிகவும் விரிவாக ஆராயப்பட வேண்டியவை. இருந்தாலும் இங்கு சில விடயங்களைச் சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

இலங்கையின் முதல் இடதுசாரிக் கட்சியாக 1935இல் லங்கா சமசமாஜக் கட்சி ஆரம்பிக்கப்பட்ட போதும், அது நாட்டின் உடனடிப் பிரச்சினைகளை இனம் காணத் தவறியதாலும், சர்வதேச அரங்கில் ஏற்பட்ட சித்தாந்த முரண்பாடுகளாலும் தவறான பாதையில் போனதால், மக்களுக்குத் தலைமை தாங்கும் நிலையையும், பலத்தையும் இழந்தது. பின்னர் அது இடதுசாரிகளின் தொடர் பிளவுகளுக்கும் இட்டுச் சென்றது.

இந்த நிலைமையில் நாட்டு மக்களின் உடனடித் தேவையான ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு, பெரும் முதலாளித்துவ எதிர்ப்பு கடமைகளைப் பூர்த்தி செய்யுமுகமாக சிறீ.ல.சு.க. உருவானது. எனவே அந்தக் கட்சியுடடன் கூட்டுச் சேர்ந்து அரசியல் செய்ய வேண்டிய ஒரு தேவை இடதுசாரிக் கட்சிகளுக்கு உருவானது. அது தவிர்க்க முடியாததும், தவறற்ற மார்க்சிச அணுகுமுறையுமாகும்.

ஆனால், இலங்கையின் ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசிய முதலாளித்துவ வர்க்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய சிறீ.ல.சு.கவுடன் இடதுசாரிகள் கூட்டுச் சேர்ந்தது சரியென்றாலும், அந்தக் கட்சியின் மறுபக்கமான வலதுசாரிப் போக்குகளை இடதுசாரிக் கட்சிகள் எதிர்த்துப் போரடியிருக்க வேண்டும். ஆனால் அவை அப்படிச் செய்யவில்லை.

அத்துடன் தேர்தல்களில் சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து போட்டியிட்டாலும், அதன் தலைமையிலான அரசாங்கங்களில் பங்குபற்றாது வெளியிலிருந்து கொண்டு அதன் மக்கள் சார்பு நடவடிக்கைகளை ஆதரிக்கின்ற அதேவேளையில், அதன் மக்கள் விரோத நடவடிக்கைகளை எதிர்த்துப் போராடியிருக்க வேண்டும். ஆனால் இடதுசாரிக் கட்சிகள் அப்படிச் செய்யத் தவறிவிட்டன. இந்த அணுகுமுறைக்கு எமது அயல்நாடான இந்தியாவின் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஒரு உதாரணமாக இருந்த போதிலும், அந்தக் கட்சியிடமிருந்து பாடம் கற்றுக் கொள்ள எமது இடதுசாரிக் கட்சிகள் தவறிவிட்டன.

இந்த நிலைமைகளால், இடதுசாரிக் கட்சிகளுக்குப் பின்னால் ஸ்தாபன ரீதியாக அணி திரண்டிருந்த தொழிலாளி வர்க்கமும், பரந்துபட்ட பொதுமக்களும் இடதுசாரிக் கட்சிகளில் நம்பிக்கை இழந்ததுடன், கட்சியும் படிப்படியாகப் பலவீனப்பட்டு, இன்று கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலைக்கு இடதுசாரிக் கட்சிகள் வந்துள்ளன.

அதன் காரணமாகவே சிறீ.ல.சு.கவின் வலதுசாரித் தலைமை மிகச் சுலபமாக இடதுசாரிக் கட்சிகளைக் கழற்றி விட்டுள்ளது. இந்தப் பாதகமான நிலைமையில் இருந்து பாடம் கற்றுக் கொண்டு, தமது எதிர்கால கொள்கைகளையும், வேலைத் திட்டங்களையும், தந்திரோபாயங்களையும் இடதுசாரிக் கட்சிகள் வகுக்க வேண்டும்.

அதற்கு முதலில் செய்ய வேண்டியது, இடதுசாரிக் கட்சிகள் ஒவ்வொன்றும் தத்தமது கட்சிகளை சிந்தாந்த ரீதியாவும் ஸ்தாபன ரீதியாகவும் பலப்படுத்துவதுடன், இடதுசாரிக் கட்சிகளின் ஒன்றுபட்ட முன்னணியையும் உருவாக்க வேண்டும். அதன் பின்னர் தமது தலைமையில் மக்களை ஸ்தாபன ரீதியாக அணி திரட்ட வேண்டும். அப்படியான ஒரு உறுதியான அடித்தளத்தில் நின்று கொண்டே, சிறீ.ல.சு.க போன்ற ஏனைய ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளுடன் பின்னர் பரந்தபட்ட முன்னணிகளை உருவாக்க வேண்டும். ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பது அடிமட்டத்திலிருந்து கட்டியெழுப்பப்பட வேண்டுமேயொழிய, மேல் மட்டத்திலிருந்து உருவாக்கப்படுவதல்ல. அப்படி உருவாக்கப்படுவது நிலையானது அல்ல என்பதற்கு இன்றைய நிலை ஒரு உதாரணம்.

இடதுசாரிக் கட்சிகள் 1964இன் பின்னர் தாம் கடந்து வந்த பாதையைச் சுயவிமர்சன ரீதியாக ஆராந்து பார்ப்பதன் மூலமே இதைச் சாத்தியமாக்க முடியும். இதற்கு திரும்பவும் மார்க்சிச தத்துவத்தை ஆழமாகக் கற்பதும், அதன் வெளிச்சத்தில் எமது நாட்டுப் பிரச்சினைகளை ஆராய்வதும் மிகவும் இன்றியமையாதது.

**(‘வானவில்’ 2015 செப்ரெம்பர் இதழுக்கென எழுதப்பட்ட இக்கட்டுரை, இடமின்மை காரணமாக இவ்விதழில் பிரசுரிக்கப்பட்டுள்ளது)**

யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன
சாதலும் புதுவது அன்றே, வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்றும் இலமே முனிவின்
இன்னா தென்றலும் இலமே, மின்னொடு
வானம் தண்துளி தலைஇ யானாது
கல் பொருது மிரங்கு மல்லல் பேரியாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறை வழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியில் தெளிந்தனம் ஆகலின், மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே,
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே

**புறநானூறு – பாடல்: 192**
**பாடியவர்: கணியன் பூங்குன்றனார்**

# கண்ணாடி வீட்டிலிருந்து கொண்டு கல்லெறியும் சுமந்திரன்!



தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும், கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) அண்மையில் சில குற்றச்சாட்டுகள் சம்பந்தமாக பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில், "கருணாவும் டக்ளசும் கூட கைது செய்யப்பட்டால் நான் ஆச்சரியப்பட மாட்டேன்" எனக் கூறியிருக்கிறார்.

பிரபல சட்டத்தரணி என்று சொல்லிக் கொள்ளும் அவரது இந்தக் கூற்றில், அரசியல் நாகரீகத்தை விட, கீழ்த்தரமான அரசியல் பழிவாங்கும் மனோபாவத்தின் தொனி இருப்பதைக் காண முடிகிறது. அத்துடன், சந்தேக நபராகக் கைது செய்யப்பட்டுள்ள பிள்ளையானின் நிலையை, குற்றம் நிரூபிக்கட்டவர் என்ற கணிப்பில் வைத்து இந்த எல்லாம் தெரிந்த சட்டத்தரணி கருத்துச் சொல்வதாகவும் இருக்கின்றது.

முன்னைய அரசாங்க காலத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பின்கதவு (தேசியப் பட்டியல்) பாராளுமன்ற உறுப்பினராக இருந்த சுமந்திரன், இந்தமுறை யாழ்ப்பாண மாவட்டத்தில் தேர்தலில் நேரடியாகப் போட்டியிட்டு பாராளுமன்ற உறுப்பினராகியுள்ளார். (ஆனால் இதிலும் கூட சில சர்ச்சைகள் கிளம்பியுள்ளன. அதாவது இம்முறை யாழ்.மாவட்டத்தில் போட்டியிட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களில் முக்கியமான சிலர் தோல்வியடைந்ததாகவும், பின்னர் அவர்கள் மோசடியான வாக்கு எண்ணுகை மூலம் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆக்கப்பட்டதாகவும், தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட சில அதிகாரிகளை மேற்கோள்காட்டி மக்கள் பேசி வருகின்றனர்)

## சேதுபதி

சுமந்திரன் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினராக வந்த பின்னர், முன்னர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் என்று சொல்லிக்கொண்டு, எப்படி வாயில் வந்ததை எல்லாம் உளறிக் கொட்டினாரோ அதேபோல, சுமந்திரனும் செயற்படுவதைக் காண முடிகிறது. அத்துடன் எல்லா விடயங்களிலும் 'முந்திரிக் கொட்டையென' மூக்கை நுழைப்பதையும் காண முடிகிறது.

கருணாவையும், டக்ளசையும், பிள்ளையானையும் பற்றிக் கருத்துச் சொல்வதற்கு முன்னால் தமிழ் தேசியக் கூட்டமைப்புக் தலைவர்கள், தமது முகங்களை ஒருமுறை கண்ணாடியில் பார்த்து, தமது அசிங்கங்களை ஒருமுறை நோட்டம் விடுவது நல்லது.

குற்றம் செய்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் சட்டத்தால் தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் யாருக்கும் இரண்டு கருத்து இருக்க முடியாது. ஆனால் சட்டத்தை விருப்பு வெறுப்புக்கேற்ப பிரயோகிப்பதையும், அரசியல் பழிவாங்கல் நோக்கத்துடன் பயன்படுத்துவதையும் ஏற்க முடியாது. அத்துடன் எய்தவன் இருக்க அம்பை மட்டும் தண்டிப்பதையும் ஏற்க முடியாது.

இலங்கையில் நடைபெற்ற அத்தனை மனித உரிமை மீறல்களினதும் சூத்திரதாரிகள் இருவர். அதில் ஒருவர் ஐக்கிய தேசிய கட்சி. மற்றவர் தமிழ் தலைமை. இவர்கள் இருவரும்தான் விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டிய மாபெரும் குற்றவாளிகள்.

1976இல் தமிழ் தலைமை வட்டுக்கோட்டையில் மேற்கொண்ட தமிழ் ஈழ தீர்மானம்தான், தமிழ் இளைஞர்களை வன்முறைப் பாதையில் தூண்டி 30 வருட மனித உரிமை மீறல்களுக்கு வழிவகுத்தது. அதற்கு முன்னதாக யாழ்ப்பாணத் தேர்தல் தொகுதியை சிரமம் இல்லாமல் கைப்பற்ற வேண்டும் என்ற மிகக் குறுகிய அற்ப தேவைக்காக, யாழ் மாநகர முதல்வராக இருந்த அப்பிரட் துரையப்பாவை தமிழரசுக் கட்சித் தலைமை பிரபாகரன் குழுவினரைப் பயன்படுத்தி படுகொலை செய்தது.

அன்றிலிருந்து தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள், இடதுசாரித் தலைவர்கள், கல்விமான்கள், சமய-சமூகத் தலைவர்கள், தொழிற்சங்கவாதிகள், மனித உரிமையாளர்கள், மாற்றுக் கருத்தாளர்கள் என பல்லாயிரக்கணக்கானோரை புலிகள் படுகொலை செய்வதற்கு தமிழ் தலைமை வழிவகுத்துக் கொடுத்தது. இவர்களில் அன்றைய தமிழ் தலைவர்களான அ.அமிர்தலிங்கம், வெ.யோகேஸ்வரன், அ.தங்கத்துரை, நிமலன் சௌந்தரநாயகம், கிங்ஸ்லி இராசநாயகம் போன்ற தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் அடங்குவர்.

மறுபக்கத்தில், 1977இல் பதவிக்கு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐ.தே.க. அரசாங்கம் இனப்பிரச்சினையை யுத்தமாக மாற்றி, ஆயுதப்படைகள் மூலம் எல்லையில்லா மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டது. அத்தயை ஒரு வழிவந்த ஐ.தே.க. அரசுதான் இன்றும் பதவியில் இருக்கின்றது. அந்த அரசைப் பதவிக்குக் கொண்டு வந்ததில் இன்றைய தமிழ் தலைமையான சுமந்திரனின் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் பங்கு இருக்கின்றது. அத்துடன் கூட்டமைப்பு அந்த அரசுடன் முன்னொருபோதும் இல்லாத வகையில் கொஞ்சிக் குலாவியும் வருகின்றது.

நிலைமை இவ்வாறிருக்க, ஐ.தே.க அரசும், தமிழ் தேசியக் கூட்டமைப்பும் தமது தரப்புகளால் (புலிகளாலும், ஐ.தே.க குண்டர்களாலும்) கொலை செய்யப்பட்டவர்கள் பற்றி எவ்வித விசாரணையையும் முன்னெடுக்காமல், தமக்கு எதிரானவர்கள் மீது மட்டும் விசாரணைகளை நடாத்த முற்படுவது முற்றுமுழுதான அரசியல் பழிவாங்கலே தவிர வேறொன்றும் அல்ல.

உண்மையில் இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள், அரசியல் படுகொலைகள் என்பன பற்றி துரையப்பா கொலையிலிருந்து அதை ஆரம்பிக்க வேண்டும். அதுமட்டுமின்றி விசாரணை செய்வதானால், இலங்கை - இந்தியப் படைகள் செய்த மனித உரிமை மீறல்கள், புலிகள் உட்பட பல்வேறு தமிழ் ஆயுதக்குழுக்களும் செய்த படுகொலைகள், ஐ.தே.க. குண்டர்கள் 1981 யாழ்.மாவட்ட அபிவிருத்திச்சபைத் தேர்தலின் போது யாழ்ப்பாணத்தில் கட்டவிழ்த்துவிட்ட அராஜகங்கள் என அத்தனையையும் விசாரிக்க வேண்டும். அப்பொழுதுதான் உண்மையான ஒரு மனித உரிமை மீறல் பற்றிய விசாரணையாக அது இருக்கும்.

அப்படி விசாரிக்கும் போது, தமிழரசுக் கட்சித் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தை மேடையில் வைத்துக் கொண்டு, அவரது ஆட்சேபனை எதுவும் இல்லாமல், "தமிழ் துரோகிகளுக்கு இயற்கை மரணம் கிடையாது" என்று பேசிய அன்றைய தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர்களின் (மாவை சேனாதிராசா, வண்ணை ஆனந்தன் போன்றவர்கள் அன்றைய பிரபல தலைவர்கள்) உரைகள், எப்படி புலிகளின் மிக மோசமான அராஜகம் வரை இட்டுச் சென்றது என்பதை வரலாறு பதிவு செய்வதுடன், சுமந்திரன் இன்று அங்கம் வகிக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்படும்.

ஏனெனில், தமிழ் மக்களை வகைதொகையில்லாமல் கொன்று குவித்த அந்தப் புலிகளைத்தான், தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதி என திரும்பத்திரும்பப் பிரகடனப்படுத்தி வந்துள்ளது. அந்தக் கொலைகாரர்களை அங்கீகரித்து நியாயப்படுத்திய தமிழ் தேசியக் கூட்டமைப்பு, எவ்வாறு தம்மைவிடக் குறைவான குற்றங்களைப் புரிந்த கருணாவையோ, பிள்ளையானையோ நோக்கி விரலை நீட்டுவதற்குத் தார்மீக உரிமை இருக்க முடியும். அதுவும் அவர்கள் புலிகளை ஆதரித்த காலத்தில்தான் அதிகமான அராஜகங்களைப் புலிகள் செய்துள்ளார்கள் என்பதை அனைவரும் அறிந்த பிறகு.

அதுமாத்திரமல்ல, ஜோசப் பரராசசிங்கத்தைக் கொலை செய்தவர்கள் பற்றிய விபரங்களை முன்னைய அரசாங்கத்திடம் கொடுத்தும் அவர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என இப்பொழுது கூட்டமைப்பினர் கூறுகின்றனர். அப்படியானால் அவர்களது கிழக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர்களான தங்கத்துரை. நிமலன் சௌந்தரநாயகம், கிங்ஸ்லி இராசநாயகம் ஆகியோரைக் கொலை செய்தவர்களைக் கைதுசெய்யும்படி இவர்கள் ஏன் கோரவில்லை. இவர்களில் ஒருவர் தேர்தலில் தோல்வியடைந்த ஜோசப் பரசாசாசிங்கத்தை பாராளுமன்ற உறுப்பினராக்குவதற்காகத்தான் கொலை செய்யப்பட்டார் என மக்கள் பேசிக்கொண்டார்களே? புலிகள் அவர்களைக் கொலை செய்தபடியால்தான் கூட்டமைப்பு அவர்கள் கொலை பற்றி வாய் திறக்கவில்லையா?

எனவே, குற்றவாளிக் கூண்டில் முதலில் ஏற்றப்பட வேண்டியவர்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரே. ஆனால் அவர்கள் தாமே கண்ணாடி வீட்டுக்குள் இருந்துகொண்டு மற்றவர்களை நோக்கி கல் வீசுவதுதான் வேடிக்கையானதாக இருக்கின்றது. அவர்களது இந்தச் செய்கை தவறானது மட்டுமல்ல, தற்கொலைக்கு ஒப்பானதும் கூட. *

# கனடிய பொதுத் தேர்தலில் லிபரல் கட்சி ஆட்சியைக் கைப்பற்றியது!

**2015** ஒக்ரோபர் 19ஆம் திகதி நடைபெற்ற கனடிய பாராளுமன்றத் தேர்தலில் மொத்தம் 338 ஆசனங்களில் 184 ஆசனங்களைக் கைப்பற்றி, லிபரல் கட்சி (Liberal Party) ஆட்சி அமைத்துள்ளது. அக்கட்சியின் தலைவர் ஜஸ்ரின் ருடொ - Justin Trudeau - (முன்னைய பிரதமர் பியரே ருடேயின் - Pierre Trudeau மகன்) பிரதமராகியுள்ளார்.



ஜஸ்ரின் ருடோ (Justin Trudeau)

கடந்த 10 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்த முன்னாள் பிரதமர் ஸ்ரீபன் கார்பரின் (Stephen Harber) தீவிர வலதுசாரிக் கட்சியான கொன்சர்வேடிக் கட்சி (Conservative Party) தோல்வியடைந்து 99 ஆசனங்களுடன் இரண்டாம் இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது. முன்னைய பாராளுமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சியாக இருந்த நியு டெமோகிரட்டிக் கட்சி (New Democratic Party) இம்முறை 44 ஆசனங்கள் மட்டும் பெற்று மூன்றாம் இடத்தை அடைந்துள்ளது. 10 ஆசனங்கள் பெற்ற கியுபெக் மாகாணத்தின் பிரிவினைவாத கட்சியான புளொக் கியுபெக்குவா (Block Quebecois) நான்காவது இடத்திலும், கடந்த பாராளுமன்றம் போல இம்முறையும் ஒரு ஆசனம் பெற்ற கிறீன் கட்சி (Green Party) ஐந்தாவது இடத்திலும் வந்துள்ளன.

மக்களின் வெறுப்பைச் சம்பாதித்திருந்தபடியால், கொன்சர்வேடிக் கட்சியின் தோல்வி முன்னரே எதிர்பார்க்கப்பட்டதுதான். கார்பர் அரசாங்கம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பின்பற்றிய கொள்கைகள் மக்களின் எதிர்ப்பைச் சம்பாதித்திருந்தது.

குடியேற்றவாசிகளுக்கு எதிரான கடுமையான சட்டங்கள், பழங்குடியினர் மீதான பாரபட்சம், சிறுபான்மை இனத்தவருக்கு, குறிப்பாக முஸ்லீம் இனத்தவரின் கலாச்சாரத்துக்கு எதிரான கடும் போக்குகள், மனித உரிமையை கட்டுப்படுத்தும் C-51 சட்டம், கொன்சர்வேடிக் செனட்டர்கள் மீதான ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுகள், ஊழியர்களின் நலவுரிமைகள் பாதுகாக்கப்படாமை, பெரும் கோப்பரேட் நிறுவனங்களுக்கு ஆதரவான போக்கு, தலைநகர் ஒட்டாவாவில் கம்யூனிச எதிர்ப்பு நினைவகம் ஒன்றை அமைக்க எதிர்ப்பாளர்களுக்கு அனுமதி அளித்தது என்பன உள்நாட்டில் கார்பர் அரசின் மீது மக்கள் அதிருப்தி கொண்டதற்கான காரணிகளாகும்.

அதேநேரத்தில், கார்பரின் ஒருதலைப்பட்சமான இஸ்ரேல் ஆதரவுப்போக்கு, சிரியாவில் இஸ்லாமிய தீவிரவாதிகளுக்கு எதிரான போரில் நேரடியாக ஈடுபட்டது, ஆப்கானிஸ்தான் யுத்தம், ரஸ்யாவுக்கு எதிரான கடும் போக்கு போன்றவை சர்தேச அளவில் கார்பர் அரசின் மீதான வெறுப்புக்குக் காரணங்களாகும்.

இவற்றின் காரணமாகவே இம்முறை லிபரல் அமோக வெற்றிபெற முடிந்தது. எது எப்படியிருப்பினும், லிபரல் ஆட்சியின் கீழும் கனடிய மக்களின் பிரதான பிரச்சினைகளுக்கு தீர்வு வந்துவிடும் என்று சொல்ல முடியாது. ஏனெனில், கனடா, அமெரிக்கா, பிரித்தானியா, ஜேர்மனி, பிரான்ஸ், அவுஸ்திரேலியா போன்ற வளர்ச்சி அடைந்த முதலாளித்துவ நாடுகளில் உள்ள அரசியல் கட்சிகளுக்கிடையில் அடிப்படையான வித்தியாசங்கள் இருப்பதில்லை. (ஆசிய – ஆபிரிக்க – லத்தீன் அமெரிக்க நாடுகளிலும் இந்த நிலை உருவாகி வருகின்றது) உள்நாட்டு ரீதியாக பெரும் ஏகபோக நிறுவனங்களின் நலன்களைப் பாதுகாப்பதும், சர்வதேச ரீதியாக மேற்குலக ஏகாதிபத்திய நலன்களைப் பாதுகாப்பதுமே இவற்றின் பிரதான கடமைகளாக இருக்கின்றன. ஒரு பிரச்சினையில் கொள்கை சம்பந்தமான முரண்பாட்டை விட, அணுகுமுறை சம்பந்தமாகவே முரண்பாடுகள் இருக்கும்.

கனடாவைப் பொறுத்தவரை, உலகின் முதல்தர வல்லரசான அமெரிக்காவில் உள்ள ஒபாமாவின் அரசாங்கத்தையும் விட, ஸ்ரீபன் கார்பரின் கொன்சவேர்டிக் அரசு மிகவும் வலதுசாரித் தன்மையானதும், பிற்போக்கானதும் என்றபடியாலேயே, அதை மக்கள் வீட்டுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். ஏனெனில் மக்களுக்கு மூச்சு விடுவதற்கு ஒரு சிறு இடைவெளி தேவைப்பட்டது.

**– மகா**

15ம் பக்கத்தொடர்ச்சி...

இப்பொழுதுதான், அவர்கள் சற்று நிம்மதியாகத் தமது தொழிலைச் செய்ய ஆரம்பித்துள்ளார்கள். ஆனால் 'பனையாலை விழுந்தவனை மாடேறி மிதித்தது' போல, அவர்களது வாழ்வைத் தமிழக மீனவர்கள் சூறையாடுவது எந்தவிதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாதது. அவர்களது பிரச்சினை வெறுமனே அவர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினை மட்டும் அன்று. அது ஒரு தேசியப் பிரச்சினை. எனவே இலங்கை அரசும், அனைத்து அரசியல் கட்சிகளும், அனைத்து மக்களும், இந்தப் பிரச்சினையில் ஓரணியில் நின்று அவர்களுக்கு ஆதரவளிக்க வேண்டும்.

எமது மீனவர்கள் இந்தப் பிரச்சினை சம்பந்தமாக ஆர்ப்பாட்டங்கள், கண்டனத் தீர்மானங்கள், மகஜர் கையளிப்புகள், தபாலட்டைப் போராட்டம், கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவருக்கும், யாழ்ப்பாணத்திலுள்ள துணைத்தூதுவருக்கும் மனு, என எத்தனையோ வழிமுறைகளைச் செய்துவிட்டார்கள். ஆனால் அவற்றால் எந்தப் பிரயோசனமும் ஏற்பட்டதாக இல்லை.

எனவே, எமது மீனவர்களை தமிழக மீனவர்களின் அத்துமீறலில் இருந்து பாதுகாப்பதற்காக, இந்திய அரசுடன் கறாராகப் பேசி அதனாலும் பயன் இல்லையென்றால், உண்மையான எதிர்க்கட்சியினர் நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டது போல, தேவையேற்பட்டால் இந்தப் பிரச்சினையை சர்வதேச அரங்கிற்கு, அதாவது ஐ.நா., சர்வதேச நீதிமன்றம் மற்றும் மனித உரிமை அமைப்புகள் என்பனவற்றிடம் எடுத்துச் செல்ல வேண்டும். இதைத்தவிர, இலங்கைக்கு முன்னால் வேறு தெரிவுகள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. *

## இது நகைச்சுவையல்ல!

மறைந்த நடிகர் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன், ஒரு நாள் பழைய சாதத்துல மோர் விட்டு, சின்னவெங்காயம், பச்சை மிளகாயைக் கடிச்சு, ருசிச்சு சாப்பிட்டுக்கிட்டிருந்தாராம். அவரைப் பார்க்க வந்த நண்பர், "என்னாங்க நீங்க... பழையதைப் போய் சாப்பிட்டுக்கிட்டிருக்கீங்க?"னு கேட்டிருக்கிறாரு. பதில் பேசாத கலைவாணர், தன்னோட உதவியாளரைக் கூப்பிட்டு, "நீ போய் ஹோட்டல்லே பழையது வாங்கிட்டு வா"னு அனுப்பியிருக்காரு. எங்கெல்லாமோ அலைஞ்சு, திரிஞ்சு பார்த்துட்டு, களைச்சுப் போய் வீட்டுக்கு வந்த அந்த உதவியாளர், "ஒரு ஹோட்டல்லேயும் 'பழையது' கிடைக்கலைங்க"னு சொன்னாராம். "பார்த்தீங்கல்ல.. விலைக்கு வாங்க முடியாத அமிர்தம், இது"னு வந்த நண்பர்கிட்ட சொன்னாராம் கலைவாணர்.
(பசுமை விகடன்)

## யாழ்ப்பாணப் பெருங்குடி மக்கள்!

யாழ்ப்பாணத்தில் மது பாவனை வெகுவாக அதிகரித்துள்ளதை மதுவரித் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கை சுட்டிக் காட்டுகின்றது. அதன்படி, 2009இல் அங்கு 7,62,610 லிற்றர் பியர் வகைகள் விற்பனையாகியுள்ளன. அத்தொகை 2013இல் 40,56,999 லிற்றராக அதிகரித்துள்ளது. அதாவது 5 மடங்கு அதிகரிப்பு.

வெளிநாட்டு மது வகைகளைப் பொறுத்தவரையில், 2013இல் நுகர்வு 800 வீதமாக அதிகரித்துள்ளது. இந்த ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் இத்தொகை மேலும் அதிகரித்துள்ளது.

தமிழ்நாட்டில் இப்பொழுது வாக்காளர்களைக் கவருவதற்காக 'மது ஒழிப்பை' அநேகமான அரசியல் கட்சிகள் கையில் எடுத்துள்ளன. எடுத்ததிற்கெல்லாம் தமிழ்நாட்டை 'வாய்பார்த்து' நிற்கும் யாழ்ப்பாணத் தமிழர்கள் இதில் மட்டும் அசமந்தமாக இருப்பது ஏனோ தெரியவில்லை.




## இது எப்படி இருக்கு?

இந்த நாவலின் ஆசிரியர் அலெக்சாந்தர் புஸ்கினே அத்தகைய ஆளும் வர்க்கத்தினரின் மரபில் வந்தவர்தாம். ..புரட்சிக்குப் பிறகு, 'அதிகார வர்க்கம் சார்ந்த பிற்போக்குக் குப்பைகள்' என்று பழித்து எரிக்கத் துணிந்தவர்கள் கூட மகாகவி புஸ்கினின் நூல்களைத் தனியே பிரித்து உச்சி மீது வைத்துக் கொண்டனர் என்ற செய்தியைக் கேள்வியுறும் பொழுது இலக்கியங்கள் வர்க்கங்களுக்கு அப்பாற்பட்டவை உண்மை தெளிவாகிறது.

–ருஸ்ய எழுத்தாளர் அலெக்சாந்தர் புஸ்கினின் 'கப்டன் மகள்' என்ற நாவலைத் தமிழில் மொழிபெயர்த்த பிரபல எழுத்தாளர் ஜெயகாந்தன் எழுதிய முன்னுரையிலிருந்து

ஜெயகாந்தன் தனது வாழ்க்கையை கம்யூனிஸ்ட் இயக்கத்தில் ஆரம்பித்து இறுதியில் சங்கராச்சாரியாரில் முடித்ததிற்கு இவரது இந்த 'வர்க்கங்களுக்கு அப்பாற்பட்டது இலக்கியம்' என்ற பார்வைதான் காரணமோ என்னவோ?

## இஸ்ரேலில் அகதிகள் படும்பாடு!

இஸ்ரேலில் அகதிகளாகக் குடியேறி வாழும் வெளிநாட்டவர்களில் ஆபிரிக்க நாடான எரித்திரியாவின் மக்களும் அடங்குவர். அவர்களில் சுமார் 34,000 பேர் அங்கு அகதிகளாக வாழ்கின்றனர். ஆனால் இஸ்ரேலின் கடுமையான குடிவரவுச் சட்டம் காரணமாக அவர்களில் நான்கு பேருக்கு மட்டுமே அகதி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

## நாஜிகளின் இசை!

இசையை அனுபவிக்கத் தெரியாதவன் சதிகாரனாகவும் கொலைகாரனாகவும் இருப்பான் என்று சேக்ஸ்பியர் சொல்லியிருப்பது அவன் நினைவுக்கு வந்தது.

ஆனால், இரண்டாம் உலகப்போரில் ஏற்பட்ட விஞ்ஞான சாதனை, நூற்றுக்கணக்கான யூதர்களை ஒரு கணத்தில் காஸ் சேம்பரில் போட்டு எப்படிக் கொல்வது என்பதுதான்.

அவ்வாறு யூதப் பெண்களையும் குழந்தைகளையும் கொல்வதற்காக அழைத்துச் செல்லும்போது, நாஜி வீரர்கள் வாக்னர் இசையைக் கேட்டு மகிழ்ந்து கொண்டிருப்பார்களாம்!

இசையும் விஞ்ஞானமும் சீராக வளர்ச்சி அடைந்திருந்தன என்பதற்கு இதைவிட வேறு என்ன உதாரணம் வேண்டும்?

ஹிட்லருக்கு வாக்னர் இசை என்றால் ரொம்பப் பிடிக்குமாம்.

வாக்னர் இசைக்கும், நாஜிப் பரிணாம வளர்ச்சிக்கும் என்ன சம்பந்தம்?
(இந்திரா பார்த்தசாரதி எழுதிய 'ஆகாசத் தாமரை' என்ற நாவலில் இருந்து)

## ஓ...வியட்நாம்! ஓ...அமெரிக்கா!

அண்மையில் வெளியான ஒரு தகவலின்படி, 1965 முதல் 1975 வரையான 10 ஆண்டு காலத்தில் அமெரிக்கா வியட்நாம் மண்ணில் நிகழ்த்திய ஆக்கிரமிப்புப் போரில், 30 இலட்சம் வியட்நாமிய மக்களும், 58,000 அமெரிக்கர்களும் இறந்துள்ளனர்.

1983 முதல் 2009 வரையிலான 26 வருட 'தமிழீழ' போரில் சுமார் 1 இலட்சம் தமிழர்களை 'சிங்கள ஆக்கிரமிப்பு' படைகளிடம் பலி கொடுத்ததாகப் பலம்பும் தமிழ் தேசியவாதிகள், ஈழத்தமிழர்களின் விமோசனத்துக்கு 30 இலட்சம் வியட்நாமிய மக்களைப் பந்தாடிய அமெரிக்காவிடம் உதவி கோரி நிற்பது எந்த அறநெறிக்குள் அடங்குகிறதோ தெரியவில்லை.

# பிங்பொங்கில் தொடங்கி புத்தகம் வரை...

ஒரு காலத்தில் சீனா, அமெரிக்காவினாலும் அதன் நேச நாடுகளாலும் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தது. அரசியல், பொருளாதாரத் தொடர்புகள் மட்டுமின்றி, கலாச்சாரத் தொடர்புகளும் இருக்கவில்லை. ஆனால் இன்றோ, நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. அமெரிக்க உதவி இன்றி சீனா தன்னைச் சமாளித்துக் கொண்டாலும், சீன உதவி இன்றி அமெரிக்கா உயிர்வாழ முடியாது என்ற நிலை.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் வருடந்தோறும் நடைபெறும் Book Expo America என்ற புத்தகக் கண்காட்சி இவ்வருடம் மே 27ஆம் திகதி ஆரம்பித்து நடைபெற்றது. இதில் சீன வெளியீட்டு நிறுவனங்களின் 10,000 ஆங்கில – சீன மொழி நூல்கள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. இந்த நூல்களை பல்லாயிரக்கணக்கான அமெரிக்க மக்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டனர்.

இக்கண்காட்சியில் உரையாற்றிய, 1971இல் ஜனாதிபதி நிக்சன் காலத்தில் இரகசியமாகச் சீனா சென்று, அமெரிக்க - சீன உறவுகளை மீண்டும் ஆரம்பித்து வைத்த அப்போதைய இராஜாங்க அமைச்சர் ஹென்றி கிஸிங்கர் (அவருக்கு முன்னோடியாக சீன மொழியில் 'பிங்பொங்' என அழைக்கப்படும் அரிக்க மேசைப்பந்தாட்டக்குழு சீனா சென்று விளையாடியது – அதனால் பிங்பொங் இராஜதந்திரம் எனவும் சொல்லப்படுவதுண்டு), கண்காட்சிக்கு சீனா அழைக்கப்பட்டதை வெகுவாகப் புகழ்ந்து பேசினார்.

## முதலாவது எலிசபெத் மகாராணியின் வித்தியாசமான பழக்கம்!

இன்று உலகம் முழுவதும் அதிகமான மக்கள் தமது உணவை கரண்டியாலும் முள்ளுக்கரண்டியாலும் சாப்பிடுவதை வழக்கமாக்கிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் ஆரம்ப காலங்களில் வெள்ளை இனத்தவர்களே அதை ஒரு வழமையாகக் கொண்டிருந்தனர். ஆனால் நாகரீகத்தை உலகிற்குக் கற்றுக் கொடுத்தவர்கள் எனச் சொல்லப்படும் இங்கிலாந்தின் முதலாவது எலிசபெத் மகாராணி தனது உணவை கரங்களால் சாப்பிடுவதையே வழக்கமாகக் கொண்டிருந்தார். முள்ளுக்கரண்டியால் சாப்பிடுவது அநாகரிகமானது என அவர் கருதியதாலேயே கைகளால் சாப்பிட்டதாகக் கூறப்படுகிறது.

# வலிகளைக் குணமாக்கும் வாழைப்பூ

வாழைப்பூ பெண்களுக்கு மிகவும் ஏற்றது. மாதவிடாய் கால வயிற்றுவலி, அதிக இரத்தப்போக்கு, வெள்ளை படுதலை சரி செய்யும் இயல்பு வாழைப்பூவுக்கு உண்டு.

இதிலுள்ள நார்ச்சத்து, கசப்புத்தன்மை போன்றவை உடலுக்கு வலுவூட்டி நோய் எதிர்ப்புச் சக்தி தரும்.

இன்சுலின் சுரக்க வைத்து கணையத்தைக் காக்கும். சர்க்கரை நோயாளிகளுக்கு வாழைப்பூ வரப்பிரசாதம். உடல் சூடு தணித்து, குடல் புண், மூல வியாதி, மலட்டுத்தன்மை போக்கும்.

வாழைப்பூவை அவித்து, அதன் சாற்றைக் குடிக்கலாம். வயிற்று வலிக்கு இது நல்ல மருந்து. ஆண்களுக்கு தாது விருத்தி, விந்து பலப்பட உதவும். வாழையில் இருந்து பிரித்து எடுத்த இரண்டு நாட்களுக்குள் வாழைப்பூவை சமைத்து உண்பதே சாலச் சிறந்தது. வாழைப்பூவை மிக்சியில் அரைத்து சாறு எடுத்து, பனை வெல்லத்துடன் சேர்த்துப் பருகிட, வெள்ளை படுதல், அதிக இரத்தப்போக்கு, வயிற்றுவலி, உடல் வலி குணமாகும்.

வாழைப்பூவின் குருத்தை அப்படியே உண்ணலாம். இதைப் பொரியல், கூட்டு, தோசை, வடை, அடை என செய்தும் உண்ணலாம். பருப்பு உசிலியும் செய்யலாம். ஆரோக்கியத்தை அள்ளித் தரும் வாழைப்பூவை சாப்பிட சிறு வயது முதலே குழந்தைகளைப் பழக்க வேண்டும்.

நன்றி: மங்கையர் மலர்

# பெண் என்ன செய்ய வேண்டும்?

"ஒரு பெண் தன் அடிமைத்தனத்தில் இருந்து விடுபட என்ன செய்ய வேண்டும்?

அவள் தன் மதத்தை விட்டு வெளியேற வேண்டும்!

எல்லா காலகட்டங்களிலும் ஒரு பெண்ணை மதத்தின் கோட்பாடுகள் அடிமையாகவே வைத்திருக்கின்றன!! சில மாதங்களுக்கு முன்னர் காலமான தமிழகத்தின் தலை சிறந்த எழுத்தாளர்களில் ஒருவரான ராஜம் கிருஸ்ணன் ஒரு பேட்டியில் கூறியது

## ஓடினேன்...ஓடினேன்...!

சாதிப் பேய் மிரட்டியது
ஊரை விட்டு ஓடினேன்!
பேரினவாதப் பிசாசு மிரட்டியது
வன்னி நோக்கி ஓடினேன்!
'விடுதலை'ப் பேய் மிரட்டியது
நாட்டை விட்டே ஓடினேன்!
இப்போ, பனி மிரட்டும்
இரவல் தாய்நாட்டில்
ஓட வழியின்றி வாழ்கிறேன்!


–அகதி

(இணையத்தளம் ஒன்றில் வாசித்த கவிதை)

## இதிலும் சீனா சாதனை!

உலக ரீதியாக துரித உணவுச் சந்தையில் செலவழிக்கப்படும் பணத்தில் சுமார் கால்வாசிப் பங்கு சீனாவினுடையதாகும். துரித உணவுச் சேவைக்காக உலகம் முழுவதும் செலவழிக்கப்படும் ஒவ்வொரு 5 டொலரிலும் 1 டொலர் சீனர்களுடையதாகும். 130 கோடி சனத்தொகை கொண்ட சீனாவில், அண்மைக் காலங்களில் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சி காரணமாக சுமார் 30 கோடி பேர் மத்தியதர வர்க்கத்தவர்களாக மாறியிருக்கின்றனர். இந்த நிலைமையே சீனா உலக உணவுச் சந்தையில் அதிக பணத்தைச் செலவழிக்கக் காரணம். எனக் கூறப்படுகிறது.

# இலங்கையின் எதிர்காலம் சிவப்பு நிறமே!



## தற்போதைய அரசியல் நிலவரம் குறித்து கம்யூனிஸ்ட் கட்சி பொதுச்செயலாளர் டியு குணசேகர 'டெயிலி மிரர்' பத்திரிகைக்கு அளித்த பேட்டி

**கேள்வி:** நாட்டில் தேர்தலுக்குப் பிந்திய அரசியல் நிலைமைகள் குறித்த உங்கள் அவதானிப்புகள் என்ன?

**பதில்:** 20 வருடங்களின் பின்னர் ஜனாதிபதி முறையிலும் பாராளுமன்ற முறையிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதன்போது அரசியல் அதிகாரம் அமைதியான நாடக பாணியில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியிடமிருந்து ஐக்கிய தேசியக் கட்சிக்கு மாற்றப்பட்டுள்ளது. சட்டவாக்க அதிகாரமும் சிறிதளவு மாற்றப்பட்டு, நாட்டில் முதல் தடவையாக இரண்டு பிரதான அரசியல் கட்சிகளும் கூட்டரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு இணங்கிக் கொண்டன.

**கேள்வி:** இதை நீங்கள் எப்படி வகைப்படுத்துகிறீர்கள்?

**பதில்:** இதை ஒரு தேசிய அரசாங்கம் என நான் அழைக்கமாட்டேன். இது ஒரு இன்னொரு கூட்டரசாங்கம். ஆனால் இந்தமுறை இது ஒரே வர்க்க சக்திகளின் கூடுதலானவொரு கூட்டாக இருக்கின்றது. 'தேசிய' என்ற சொல் புதிய நிலைமையை மறைப்பதற்காகப் பயன்படுத்தப்படுகிறது.

**கேள்வி:** அரசின் தலைவராக மீண்டும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியினதும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினதும் தலைவரே இருக்கிறார். இந்த எதிர்பாராத நிலைமை குறித்து எப்படிப் பார்க்கிறீர்கள்?

**பதில்:** இது ஒரு அசாதாரணமான நிலைமை. இதைப் பெரும்பாலான மக்கள் விளங்கிக் கொள்ளவில்லை. இது இயற்கையாக இருப்பதைவிட யாந்திரீகமாக இருப்பதுடன், சிக்கலானதாகவும் இருக்கின்றது.

**கேள்வி:** எதிர்க்கட்சித் தலைவர் நியமனத்தில் சபாநாயகரின் தீர்ப்பு சரியானதா?

**பதில்:** பாராளுமன்ற சம்பிரதாயம் மற்றும் நடைமுறை விதிகளின் பிரகாரம் இதை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

**கேள்வி:** உங்கள் பார்வையில் புதிய அரசாங்கம் எதிர்நோக்கும் பயமுறுத்தலான சவால்கள் என்ன?

**பதில்:** இலங்கைக்கு சாதகமற்ற போர்க்குற்றங்கள் எனக் கூறப்படுவனவற்றுடன் சம்பந்தப்பட்ட ஜெனிவா விடயமும், உலகளாவிய நெருக்கடியுடன் கூடிய சர்வதேச நிலைமையும் கவனத்துக்குரியன. உள்நாட்டு ரீதியாக எமது உலகமய ரீதியிலான பொருளாதாரத்தின் அடிப்படைகள் ஸ்திரமற்று அல்லது மோசமாக இருக்கின்றது. தெளிவான முறையில் வீழ்ச்சி அடைந்து வரும் அரச வருவாய் பிரச்சினைக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்பதே எனது கருத்தாகும். துரதிஸ்டவசமாக, எனது பார்வையில் மிகவும் பாரதூரமாக இருக்கும் இப்பிரச்சினையே மிகவும் குறைவாகப் பேசப்படும் பிரச்சினையாக இருக்கின்றது.

முன்னைய அரசாங்கத்தில் நான் ஒரு அமைச்சர் என்ற வகையில், இப்பிரச்சினை குறித்துத் தொடர்ந்து போராடி தோல்வி அடைந்திருக்கிறேன். முன்னைய ஜனாதிபதியிடம் வளர்ந்து வரும் இந்த அபாயம் குறித்து என்னால் முடிந்தளவு எடுத்துச் சொல்லியும், எவ்வித பயனும் ஏற்படவில்லை. ஒருமுறை அரச தலைவர் உட்பட இதனுடன் சம்பந்தப்பட்டவர்கள் முன்னிலையில், வரிக் கொள்கை, வரி நிர்வாகம், வரிச் சட்டம் என்பன குறித்துப் பகிரங்கமாகவே விமர்சனம் செய்துள்ளேன். எனது நிலை சரி என்பது இன்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

**கேள்வி:** புதிய கூட்டரசாங்கம் போதிய துணிவுடன் இந்தப் பிரச்சினையைக் கையாளும் என நீங்கள் கருதுகிறீர்களா?

**பதில்:** வர்க்கரீதியாகப் பார்த்தால் ஐ.தே.கவின் கொள்கை மிக மோசமானது என்றபடியால், அவர்களால் இதைச் செய்ய முடியும் என நான் எதிர்பார்க்கவில்லை. சாராம்சத்தில் இது அடிப்படையில் அரசாங்கத்தின் வருமானம் சம்பந்தமான தலைவிதியுடன் சம்பந்தப்பட்ட விடயமாகும். அரசாங்கத்தின் வருமானம் வீழ்ச்சியடையும் இந்தப்போக்கு, 1978இல் நவ – தாராளவாதக் கொள்கைகள் அறிமுகப்படுத்தப் பட்டவுடன் ஆரம்பமாகிவிட்டது. இந்த விடயத்தில் அப்போதைய நிதியமைச்சர் ரொனி டி மெல், நவ – தாராளவாதத்தின் தந்தையான மில்ரன் ஃபிறைட்மனை (Milton Friedman) விடவும் சுறுசுறுப்பானவராக இருந்தார். புதிய கூட்டரசாங்கத்துக்கு வேறு மாற்று வழிகள் எதுவுமில்லாதபடியால், யதார்த்தத்துக்கு முகம் கொடுத்து வரிச் சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டிய தேவை உள்ளது. இந்த வரிக் கொள்கை பாரதூரமான

பிரச்சினைகளை உருவாக்கி, சமூக சமத்துவமின்மையையும், வரிப் பற்றாக்குறையையும் உருவாக்கக்கூடும்.

**கேள்வி:** இரு பிரதான அரசியல் கட்சிகளும் கூட்டரசாங்கம் ஒன்றை அமைத்தபோதிலும், 2015இல் பொருளாதார நிலைமை மோசமடைந்துள்ளது. எங்கே அவர்கள் தவறிழைத்துள்ளார்கள் என்பதை உங்களால் அடையாளம் காண முடிகிறதா?

**பதில்:** முதலாவதாக, அங்கே நிர்வாகத்தில் ஒரு மாற்றம் ஏற்பட்டதேயொழிய, கொள்கை மாற்றம் எதுவும் நிகழவில்லை. இரண்டாவதாக, 2015 ஜனவரி முதல் செப்ரெம்பர் வரை அரசியல் ரீதியாக அவர்கள் இரண்டு தேர்தல்களில் ஈடுபட்டிருந்தார்கள். மூன்றாவதாக, புதிய நிதியமைச்சர் நிலைமை மோசமடைவது சம்பந்தமான தள யதார்த்தத்தைப் புரிந்திருக்கவில்லை. நாட்டுக்குத் தேவை பொருளாதார விற்பன்னரான ஒரு நிதியமைச்சரேயொழிய, முடிவில்லாத பிதற்றல்களையும், வெட்டிப் பேச்சுகளையும் நிகழ்த்தும் இன்னொரு அரசியல் மிருகமல்ல.

**கேள்வி:** 2016 வரவு செலவுத் திட்டம் மூலம் இந்த நிலைமையை சீர்திருத்த முடியுமா?

**பதில்:** ஆம். முதலில் அவர்கள் நான் முன்னர் குறிப்பிட்டவாறு, நிலைமையின் யதார்த்தத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். புதிதாக அமைக்கப்பட்ட அரசாங்கம் சம்பந்தமாக ஒரு கடுமையான நிலைப்பாட்டை எடுக்க நான் விரும்பவில்லை. அவர்களுக்கு காலம் தேவை. ஆனால் அவர்கள் பெரிதாகப் பேசிய ஐ.தே.கவின் தகைமைசார் (Profeessionalism) நிலை எங்கே? ஐ.தே.க., உலகம் முழுவதும் இந்தப் பிரச்சினை ஏறபடுவதற்கு நவ - தாராளவாதக் கொள்கையே காரணம் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். பிரபஞ்ச ரீதியிலான பொருளாதார அடிப்படைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவததற்கு ஐ.தே.க. சிக்கன (Austerity) நடவடிக்கைகளை நாடுகின்றது. அத்தகைய அதி சூரத்தனங்களுக்கு அரசியல் யதார்த்தம் இடமளிக்காது. அவர்கள் மேலும் கூடுதலாக யதார்த்தபூர்வமானதும், மக்கள் நலன் சார்ந்ததுமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். தேசிய அரசாங்கம் ஒன்று தனது குறிக்கோளை அடைவதற்காக சிக்கன நடவடிக்கைகளை எடுப்பதானால், சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடன் ஒரு இணக்கப்பாடு ஏற்பட வேண்டும். கூட்டரசாங்கத்தில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி கூர்மையான பார்வையைக் கொண்டிருக்கும்.

**கேள்வி:** ஜெனிவா சிக்கலின் வெளிப்பாடு எப்படியிருக்கும் எனப் பார்க்கிறீர்கள்?

**பதில்:** அந்த விடயங்களைப் பொறுத்தவரை, இது ஒரு இறுதித் தீர்மானமேயொழிய அறிக்கை அல்ல. 2011இற்குப் பின்னர் பல விதமான அறிக்கைகளைப் பார்த்திருக்கிறோம். தற்போதைய ஐ.நா. அறிக்கையும் அதுபோன்ற ஒன்றுதான். இதை நிராகரிப்பதைத் தவிர எமக்கு வேறு தெரிவுகள் இல்லை. நிறைவேற்றப்பட்ட இறுதித் தீர்மானம் இறுதியாக்கப் படவில்லை. இடதுசாரிகளைப் பொறுத்தவரை, உள்நாட்டு விசாரணையும், பொறிமுறையுமே எமது நிலைப்பாடாகும். அதனால்தான், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசின் பங்காளிகளாக இருந்த நாம், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவின் அறிக்கையைத் துரிதமாக நடைமுறைப்படுத்தும்படி கோரினோம். கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்தாமைதான் அடிப்படைத் தவறாகும். அதை நடைமுறைப்படுத்தாமையே வெளிநாட்டு தயையீடு அல்லது உள்நுழைவு அல்லது அழுத்தம் என்பனவற்றை இலங்கை மீது உருவாக்கியது. இடதுசாரிகள் தொடர்ந்தும் அதே நிலைப்பாட்டிலேயே இருக்கின்றனர். வடக்கிலும் தெற்கிலும் உள்ள தீவிர போக்குள்ளவர்கள் தமது அரசியல் இருப்புக்காக இதைப் பயன்படுத்தக் காத்திருக்கின்றனர். நாம் அதற்கு இடம் அளிக்கக்கூடாது. நல்லிணக்கத்தின் ஊடாக தேசிய ஒற்றுமையை அடைவதே இறுதி இலக்காக இருக்க வேண்டும். முழு செயற்பாடும் அந்தக் கண்ணோட்டத்தை அடிப்படையாகக் கொண்டு இருக்க வேண்டும். எந்தவொரு வெளிநாட்டுச் சக்தியும் எமது விவகாரங்களில் தலையிட நாம் அனுமதிக்கக்கூடாது. அது அரசியல் ஸ்திரமின்மைக்கு இட்டுச் செல்லும்.

**கேள்வி:** இந்த புதிய அரசியல் சூழ்நிலையில் இடதுசாரி இயக்கத்தின் எதிர்காலம் என்ன?

**பதில்:** வரலாறு என்பது அதிவேக நெடுஞ்சாலைகளைக் கொண்டதல்ல. அது வளைவுகள், மலைகள், பள்ளத்தாக்குகளில் பயணிப்பது. கடந்த இரண்டு தசாப்தகால வரலாற்றைப் பாருங்கள். சில சித்தாந்தவாதிகள், சோசலிசத்தின் வீழ்ச்சியுடன் அதன் வரலாறு முடிந்துவிட்டதென்றும், நவ - தாராளவாதம் வெற்றிபெற்று விட்டதென்றும் கூறினர். அவர்களது கருத்து தவறு என நிரூபிக்கப்பட்டுள்ளது. பூகோளரீதியிலான பல்வேறு நெருக்கடிகளால் உலகம் குழப்பத்தில் ஆழ்ந்துள்ளது. ஆனால் இடதுசாரி இயக்கம் புதிய வடிவங்களிலும், வழிகளிலும் எழுந்துள்ளது அல்லது எழுந்து வருகின்றது. இலங்கையில் இடதுசாரி இயக்கத்துக்கு ஒரு பரந்த இடைவெளி இருப்பதாக நான் கருதுகின்றேன். தொழிலாளி வர்க்கத்தின் ஒற்றுமை இதற்கான வழியைத் திறக்கும். இது தர்க்கவியல் ரீதியிலானதும், பொருள்முதல்வாத ரீதியிலானதும் ஆகும். ஒரு புதிய ஐக்கிய இடதுசாரி இயக்கத்துக்கான சாத்தியக்கூறு இருப்பதாக நான் கருதுகிறேன். தற்போதைய தட்டிக்கழிக்க முடியாத அரசியல் நிலைமை உற்சாகமான சூழ்நிலைகளை உருவாக்கியுள்ளது. பின்வாங்குவதும் பின்னடைவுகளும் இடதுசாரி இயக்க வாழ்வில் வழமையாகும். சிவப்பே எதிர்காலத்தின் நிறமாகும். இடதுசாரிகள் இன்னொரு கதவினூடாக நுழைவார்கள்.

**பேட்டி கண்டவர்: சந்துன் ஜெயசேகர**
**(Sandun Jayasekara)**

**தமிழில்: சேகர்**

| பார்வைகள்: இந்தியா | சீன நாணயத்தின் சரிவும், இந்திய ரூபாயின் வீழ்ச்சியும்! |
|---|---|

# சீன நாணயத்தின் சரிவும், இந்திய ரூபாயின் வீழ்ச்சியும்!

**சீ**னா தனது பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்த அதன் நாணயமான யுவானின் மதிப்பைச் செயற்கையாகக் குறைத்தது, இந்திய ரூபாயின் மதிப்பைப் பாதித்து, ஏற்றுமதி வளர்ச்சியைச் சிக்கலுக்கு உள்ளாக்கி இருக்கிறது.

பொருளாதார வல்லுனர்கள் கணித்தது போலவே சீனா யுவானின் மதிப்பைக் கடந்தவாரம் திடீரெனக் குறைத்தது. யுவானின் மதிப்பை 1.9 சதவீதம் குறைத்த சீனா, மறுநாள் மேலும் 1.6 சதவீதம் குறைத்தது.

இதன் விளைவாக சர்வதேச நாணயச் சந்தையில் அமெரிக்க டாலரின் மதிப்பு அதிகரித்தது. அதேநேரத்தில் மற்ற முக்கிய நாடுகளின் நாணய மதிப்பு சரிந்தது, இந்திய ரூபாயின் மதிப்பும் பாதிக்கப்பட்டது.

ரூபாயின் மதிப்பில் கடும் வீழ்ச்சி ஏற்பட்டு, அமெரிக்க டாலருக்கு எதிரான மதிப்பு 65 ரூபாயைத் தொட்டது. 2013–ஆம் ஆண்டுக்குப் பின் ரூபாயின் மதிப்பு இந்த அளவிற்குச் சரிந்தது இதுவே முதல் முறை!

## சீனாவின் கவலை

உலகின் இரண்டாவது பெரிய பொருளாதார நாடான சீனா கடந்த சில மாதங்களாகவே தேக்க நிலையில் சிக்கி இருக்கிறது. ரியல் எஸ்டேட் மூலம் பொருளாதாரத்தை தூக்கி நிறுத்தும் முயற்சி எதிர்பார்த்த பலனைத் தராத நிலையில் பங்குச் சந்தையை உச்சத்துக்குக் கொண்டு சென்று சீராக்க முயன்றது. ஆனால் கடந்த மாதம் பங்குச் சந்தை சரிவுக்குள்ளாகி அதிர்ச்சி அளித்தது. சீனாவின் ஏற்றுமதியிலும் பெரும் சரிவு ஏற்பட்டிருப்பதை ஜூலை மாத புள்ளி விவரங்கள் உணர்த்தின. ஏற்றுமதி 8.3 சதவீதம் குறைந்திருந்தது. ஏற்றுமதியே வளர்ச்சிக்கு உந்துசக்தியாக இருந்ததால், சீன அரசு வேறு வழியில்லாமல் யுவான் நாணய மதிப்பைச் செயற்கையாகக் குறைத்தது.

யுவான் மதிப்புக் குறைக்கப்பட்டதால் சீன நிறுவனங்கள் ஏற்றுமதி செய்யும் பொருட்கள் மற்ற நாடுகளில் மேலும் குறைந்த விலையில் கிடைக்கும். இது ஏற்றுமதி வளர்ச்சியை ஊக்குவிக்க உதவும் என்பதுதான் சீனாவின் கணக்கு!

மேலும், அமெரிக்கா மற்றும் சதுவதேச நாணய நிதியமான ஐ.எம்.எப். ஆகியவை அன்னிய செலாவணி சந்தைக்கு ஏற்ப நாணயத்தின் மதிப்பு நிர்ணயிக்கப்பட வேண்டும் என சீனாவை வலியுறுத்தி வந்தன.

## இந்தியாவக்குப் பாதிப்பு

சீனாவின் நடவடிக்கை அன்னிய செலாவணி சந்தையில் பாதிப்பை ஏற்படுத்தியது. அமெரிக்க டாலரின் மதிப்பை மேலும் அதிகரித்து, இந்திய ரூபாய் உள்ளிட்ட நாணயங்களின் மதிப்பு சரிந்தது. இந்த நடவடிக்கை ஏற்றுமதி வளர்ச்சியையும் பாதிக்கும் என்ற அச்சம் நிலவுகின்றது.

யுவான் மதிப்பு குறைந்திருப்பதால் சர்வதேச சந்தையில் சீனா ஏற்றுமதி செய்யும் பொருட்களின் விலை மற்ற நாட்டு பொருட்களை விட மலிவாகும்.

இதனால் பிற நாடுகளின் ஏற்றுமதி பாதிக்கப்படும். இதற்கு ஈடுகொடுக்க சம்பந்தப்பட்ட நாடுகள் தங்கள் நாணயத்தின் மதிப்பைக் குறைக்க முற்பட்டால், அது முடிவில்லாத போட்டியை உண்டாக்கி, நாணய யுத்தத்திற்கு வித்திடலாம் என்ற அச்சம் இருக்கிறது. இந்தியாவைப் பொறுத்தவரை, ஏற்றுமதி பாதிக்கப்படுவதோடு, குறைந்த விலையிலான சீனத் தயாரிப்புகள் குவிந்து, உற்பத்தித் துறையையும் பாதிக்கலாம் என்ற அச்சம், தொழில்துறை மத்தியில் உள்ளது.

முதலீட்டாளர்களும் டாலரை நோக்கிச் செல்லலாம் எனக் கருதப்படுகிறது. ரூபாயின் வீழ்ச்சி கவலையோடு பார்க்கப்பட்டாலும் இந்தியப் பொருளாதாரத்தின் அடிப்படை அம்சங்கள் வலுவாக இருப்பதால் இது மேலும் மோசமாகாது என்று கருதப்படுகிறது.

ஏற்றுமதி வளர்ச்சியை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது. ஆனால் சீனா நாணய மதிப்பை மேலும் குறைக்கும் என்றால் நிலைமை மேலும் சிக்கலாகலாம். சீனப் பொருளாதாரம் எதிர்பார்த்ததை விட மோசமான நிலையில்இருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்திய ரூபாயின் மதிப்பு குறைவது கச்சா எண்ணெய் உள்ளிட்டவற்றின் செலவை அதிகரித்துப் பணவீக்கத்தையும் அதிகரிக்கச் செய்யும்.

டாலரில் கடன் பெற்றுள்ள வர்த்தக நிறுவனங்களின் லாபத்தையும் பாதிக்கும்.

**நன்றி 'கலைமகள்' சஞ்சிகை**

| பார்வைகள்: சீனா | ஒரு துன்பியலான பாடம் |
|---|---|

# ஒரு துன்பியலான பாடம்

மா ஸியாஓலின்

**து**ருக்கியின் கடற்கரையொன்றில் 3 வயது சிரிய சிறுவன் இறந்து கிடந்த காட்சி உலகையே அதிர்ச்சியில் உறைய வைத்தது. ஒரு படகில் கிரீசில் புகலிடம் பெறச் சிரிய அகதிகள் சென்ற போது முயற்சி கைகூடாததால், படகு கவிழ்ந்து அய்லன் கூர்டி (Aylan Kurdi) என்ற சிறுவனும், அவனது தாயாரும், 5 வயது சகோதரனும் கடலில் மூழ்கி இறந்தனர்.

2014இற்குப் பின்னர் ஐரோப்பா, மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்காவிலிருந்து வரும் பெருந்தொகையான குடியேற்றவாசிகளுக்கு முகம் கொடுத்து வருகின்றது. அவர்களை மீளக் குடியமர்த்துவதற்கு ஒருங்கிணைந்த கொள்கையொன்றை வகுப்பதற்கு ஐரோப்பிய யூனியன் முயன்று வருகின்ற போதிலும், உள் முரண்பாடுகள் காரணமாக அந்த முயற்சி ஆமை வேகத்திலேயே நடைபெறுகின்றது.

## போரினது வெளிப்பாடு

ஐரோப்பாவுக்கு சமீபத்தில் வந்துள்ள குடியேற்றவாசிகளில் பெரும்பாலானவர்கள் சிரியா, ஆப்கானிஸ்தான், ஈராக், லிபியா, சோமாலியா மற்றும் எரித்திரியா நாடுகளிலிருந்தே வந்துள்ளனர். இந்த எல்லா நாடுகளும் யுத்தம் மற்றும் மோதல் என்பவற்றால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

பல தசாப்தகால யுத்தம் காரணமாக ஆப்கானியர்களே உலகின் இரண்டாவது கூடுதலான அகதிகள் விண்ணப்பதாரிகளாக விளங்குகின்றனர். குறைந்தபட்சம் 4 மில்லியன் (40 இலட்சம்) சிரிய மக்களாவது போர் நடைபெறும் தமது நாட்டிலிருந்து

வெளியேறி உள்ளனர். ஈராக்கில் இஸ்லாமிய அரசு (ISIS) என்ற தீவிரவாதக் குழுவின் விரிவாக்கம் காரணமாக 3 மில்லியன் (30 இலட்சம்) வரையிலான ஈராக்கியர்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி உள்ளனர். கிழக்கு ஆபிரிக்காவிலுள்ள சோமாலியா, எரித்திரியா போன்ற நாடுகளில் மோதல் மற்றும் வறுமை என்பன காரணமாக ஒவ்வொரு மாதமும் ஆயிரக்கணக்கான மக்கள் வீடற்றவர்களாகி ஐரோப்பாவில் புகலிடம் தேடும் நிர்ப்பந்தத்திற்கு ஆளாகி வருகின்றனர்.

கடந்த பல வருடங்களாக அமெரிக்காவும், பிரதான ஐரோப்பிய நாடுகளும் பின்பற்றி வரும் நவ — தலையீட்டுக் கொள்கையால் உருவான ஆயுத மோதல்கள் காரணமாகவே தற்போதைய குடியேற்றவாசிகள் பிரச்சினை உருவாகியுள்ளது.

2001 செப்ரெம்பர் 11இல் அமெரிக்கா மீதான பயங்கரவாதத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதைத் தொடர்ந்து, ஜோர்ஜ் டபிள்யு. புஸ் நிர்வாகம் ஆப்பானிஸ்தானில் பயங்கரவாதத்துக்கு எதிரான போரை ஆரம்பித்தது. அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுப்படையில் 40 இற்கும் அதிகமான நாடுகள் இணைந்து அல் – கைடாவுக்கும் அதன் கூட்டாளியான தலிபான்களுக்கும் எதிராகப் போரிட்டன. தலிபான் ஆட்சி தூக்கியெறியப்பட்ட போதும், அதன் இராணுவக் குழுவை ஒழித்துக்கட்ட முடியவில்லை. சர்வதேச சமூகத்தின் பலமான ஆதரவு இருந்தபோதிலும், தற்போதைய ஆப்கான் அரசாங்கம் தொடர்ந்தும் பலவீனமாகவே இருந்து வருகிறது. 14 வருடப் போரின் காரணமாக பெரும்பான்மையான ஆப்கானிஸ்தான் மக்கள் தமது நாட்டை விட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

2003இல் அமெரிக்க மற்றும் பிரித்தானியப் படைகள் ஈராக்கிற்குள் புகுந்து சதாம் ஹூசேனின் ஆட்சியைக் கவிழ்த்தன. அதனால் பக்தாத்தில் ஏற்பட்ட அதிகார வெற்றிடத்தை நிரப்புவதற்காக அந்நாட்டிலுள்ள இனக்குழுக்கள், மதப்பிரிவுகள், பழங்குடியினர் மத்தியில் மோதல்கள் உருவாகின. அமெரிக்க ஆதரவுடனான ஈராக்கிய அரசாங்கம் ஸ்திரமான ஆட்சியை நடாத்துவதில் தோல்வி கண்டது. அதன் விளைவாக சில பயங்கரவாதக் குழுக்கள் அந்நாட்டில் தளங்களை அமைத்துக் கொண்டன. அவர்களுடைய கொடூரமான அட்டூழியங்கள் உலகையே உறைய வைத்ததுடன், அதன் விளைவாக பாரிய இடப்பெயர்வும் உருவானது.

2010இல் அரபு வசந்தம் என்ற பெயரில் வட ஆபிரிக்காவிலிருந்து மத்திய கிழக்கு வரை ஒரு அரசியல் கொந்தளிப்பு நிலை உருவாகி, அதன் காரணமாக இந்தப் பிராந்திய நாடுகளில் ஆழமான அரசியல், பொருளாதார, சமூகப் பிரச்சினைகள் உருவாகின. ஆனால் அமெரிக்காவினதும், ஐரோப்பாவினதும் தலையீடு குழப்பத்துக்கு மேலும் வலுச் சேர்த்தது. லிபியாவில் முகாம்மர் கடாபியின் படைகளுக்கு எதிராகப் போராடிய எதிரணியினருக்கு அமெரிக்கா தலைமையிலான நேட்டோ இராணுவ உதவிகளைக் கூட வழங்கியது.

மேற்கின் தலையீடு, அரபு வசந்தத்தின் தாக்கத்திற்குட்பட்ட துனிசியா, எகிப்து, யெமன், லிபியா, சிரியா நாடுகளில் பிளவுகளை உருவாக்கி, அவற்றை மீள முடியாத குழப்பங்களுக்குள் ஆழ்த்தி வைத்துள்ளது. இன்று இந்த நாடுகளில் பெரும்பாலானவை, இந்த நெருக்கடிகளிலிருந்து மீள முடியாத நிலையில் உள்ளன. சிலவற்றில் உள்நாட்டு யுத்தங்கள் உருவாகியுள்ளதுடன், அவை செயற்பட முடியாத அரசுகள் என்ற விளிம்பு நிலையை வந்தடைந்துள்ளன. இந்தச் சூழ்நிலைகளில் இந்த நாடுகளின் பெரும் எண்ணிக்கையிலான குடிமக்கள் நாட்டைவிட்டு வெளியேறி, மத்தியதரைக் கடலின் ஊடாக ஐரோப்பாவுக்குத் தப்பியோட முயல்கின்றனர்.

சிரியாவின் ஜனாதிபதி பசீர் ஆசாத்தின் ஆட்சி எப்பொழுதும் ஆபத்தானது என அமெரிக்காவும், சிரியாவில் பல்வேறு பிரிவுகளை ஆதரித்து வரும் வளைகுடா நாடுகளும் சொல்லி வந்ததுடன், அவரது அரசைத் தூக்கி எறிவதற்குப் போராடும் சில அதிதீவிரவாதக் குழுக்கள் உட்பட்ட குழுக்களுக்கு ஆதரவு அளித்தும் வருகின்றன. எப்படியிருப்பினும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ISIS தனது பலத்தைப் பெருக்கி, கிழக்கு சிரியாவிலும், வடக்கு ஈராக்கிலும் பெரும் பிரதேசத்தைக் கைப்பற்றி வைத்துள்ளது. சிரியாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நான்கு வருட யுத்தம் காரணமாக ஏறத்தாழ 2,50,000 மக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன், 4 மில்லியன் மக்கள் வீடு வாசல்களை இழந்து வெளியேறி உள்ளனர்.

ISIS இனால் உருவாக்கப்பட்டுள்ள குறிப்பிடத்தக்க பயமுறுத்தல் காரணமாக, அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா அதற்கெதிராக விமானத் தாக்குதல் நடாத்தும் திட்டத்தை 2014 செப்ரெம்பரில் அறிவித்தார். அதேநேரத்தில் அமெரிக்கா ISIS எதிர்ப்புக் கூட்டணி ஒன்றையும் உருவாக்கியது. எது எப்படியிருந்த போதிலும், ஒபாமா ISIS இற்கு எதிராகப் போராடுவதற்குத் தரைப்படைகளை இறக்குவதை நிராகரித்துவிட்டார். இராணுவ நடவடிக்கை சம்பந்தப்பட்ட பல நாடுகளில் சொற்ப அளவு முன்னேற்றமே ஏற்பட்டுள்ளது. அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் ISIS எதிராகவும், ஆசாத்தை தனிமைப்படுத்தவும் தொடர்ந்து போராடுவதில் கவனம் செலுத்துவதைப் பார்க்கையில், சிரியாவின் உள்நாட்டு யுத்தம் குறுகிய காலத்தில் முடிவுறும் சாத்தியக்கூறுகள் தென்படவில்லை. போர் அகதிகள் தொடர்ந்தும் நாட்டை விட்டு வெளியேறி ஐரோப்பாவை நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றனர்.

## ஐரோப்பாவின் தலையிடி

ஜோர்டான் தன்னால் முடிந்தளவு இதுவரை யுத்தம் நடைபெறும் அருகிலுள்ள நாடுகளிலிருந்து 6,29,000 அகதிகளை ஏற்றுக் கொண்டுள்ளது. லெபனானும் 1.1 மில்லியன் வெளிநாட்டு அகதிகளைக் குடியமர்த்தியுள்ளது. துருக்கியைப் பொறுத்தளவில் சிரியாவிலிருந்தும், ஈராக்கிலிருந்தும் வந்த – இவர்களில் பெரும்பாலோர் குர்டிஸ் மக்கள் – 2 மில்லியனுக்கு மேற்பட்டோரை ஏற்றுக் கொண்டுள்ளது. இந்த நாடுகள் இதற்கும் மேலாகக் கூடுதலான மக்களை ஏற்க இயலாத நிலையில் உள்ளன. மறுபக்கத்தில் பெரும்பாலான அகதிகளுக்கு ஐரோப்பாவே முன்னுரிமையான தெரிவாக இருக்கின்றது.

ஆனால் ஐரோப்பிய பயணத்துக்கான வழியைப் பொறுத்த வரையில், குறிப்பாக மத்தியதரைக் கடலைக் கடப்பதைப் பொறுத்த வரையில், அது ஆபத்து நிறைந்த ஒரு பயணமாக இருப்பதுடன், பல குடியேற்றவாசிகள் இறந்தும் இருக்கின்றனர். குற்றக் கும்பல்களால் ஏற்பாடு செய்யப்படும் மனிதக் கடத்தல்கள் மூலமே பெரும் எண்ணிக்கையிலான அகதிகள் ஐரோப்பாவில் அடைக்கலம் பெறுகின்றனர். இந்தக் கும்பல்களுக்கு அகதிகள் பணம் செலுத்துகின்ற போதிலும், அவர்களது பயணத்தின் போது பாதுகாப்பு உத்தரவாதப்படுத்தப்படாததால், அவர்களது உயிருக்கு உத்தரவாதம் இல்லாத நிலை நிலவுகின்றது.

லிபியாவிலிருந்து இத்தாலி வரையிலான கடல் ஒரு மரணப் பிரதேசமாகும். Frontex என்ற ஐரோப்பிய யூனியனின் எல்லை முகவரகத்தின் தகவலின்படி, ஓகஸ்டில் மட்டும் 188,000 குடியேற்றவாசிகளை ஐரோப்பிய யூனியன்

மத்தியதரைக் கடலில் இருந்து மீட்டிருக்கிறது. இந்த வருடம் முதல் ஏழு மாதங்களில் 2,000 பேர் வரை படகு மூழ்கியும், உணவு மற்றும் தண்ணீர் பற்றாக்குறை காரணமாகவும் இறந்திருக்கின்றனர். கடந்த வருடம் இறந்தோர் தொகை 3,279 ஆகும்.

குடியேற்றவாசிகள் பிரச்சினையைப் பொறுத்த வரையில், ஐரோப்பிய யூனியன் அங்கத்துவ நாடுகள் வெவ்வேறான அணுகுமுறையைக் கொண்டுள்ளன. ஒரு குறிப்பிட்ட தொகையானவர்களைக் கட்டாயமாக ஏற்க வேண்டும் என்ற ஐரோப்பிய யூனியன் ஆணைக்குழுவின் தீர்மானத்தை சில நாடுகள் எதிர்க்கின்றன. Kurdi இன் மரணம், உலகின் கவனத்தை ஈர்த்திருப்பதுடன், சில ஐரோப்பிய யூனியன் தலைவர்கள் கூடுதலான அகதிகளை ஏற்கும் தமது விருப்பத்தை வெளிப்படுத்தியும் உள்ளனர். ஆனால் என்ன செய்து அவர்கள் இப்பிரச்சினையைத் தீர்க்கப் போகிறார்கள்? எப்பொழுது நிலைமை சீர்பட்டு வரப்போகிறது?

அடிப்படையில் குடியேற்றவாசிகள் பிரச்சினை ஐரோப்பிய நாடுகளில் பல அரசியல், சமூக, பாதுகாப்புப் பிரச்சினைகளை உருவாக்கி இருக்கிறது. இந்த வருட ஆரம்பத்தில் பரீசில் Charlie Hebdo என்ற சஞ்சிகையின் அலுவலகத்தில் இரண்டு அல்ஜீரிய குடியேற்றவாசிகள் நிகழ்த்திய கொலைவெறித் தாக்குதல், குடியேற்றவாசிகள் பிரச்சினை பற்றிப் பரந்தளவு கவனத்தை ஈர்த்தது. பயங்கரவாதிகள் குடியேற்றவாசிகள் என்ற போர்வையில் ஐரோப்பாவுக்குள் வந்து தாக்குதல் நடத்தலாம் என்ற நியாயமான பயம் அங்கு உருவாகியுள்ளது.

அதைவிட, 2008இல் உருவான நிதி நெருக்கடியிலிருந்து ஐரோப்பிய யூனியன் பொருளாதாரம் முற்றிலுமாக விடுபட்டிருக்கவில்லை. குடியேற்றவாசிகள் தமது வேலைகளை எடுத்துவிடுவார்கள் என்ற கவலை ஐரோப்பியர்களுக்கு ஏற்பட்டுள்ளது. இந்தப் பின்னணியில், கடைகோடி வலதுசாரி அரசியல் கட்சிகளும், குழுக்களும் மிகவும் தீவிரமான முறையில் குடியேற்றவாசிகளுக்குத் தமது எதிர்ப்பைக் காட்டுவார்கள்.

(சீனாவிலிருந்து வெளிவரும் ஆங்கில வார ஏடான Beijing Review செப்ரெம்பர் 17 இதழில் Ma Xiaolin என்பவர் எழுதிய கட்டுரையின் தமிழாக்கமே இதுவாகும். தமிழில்: மணி)

**பார்வைகள்: அமெரிக்கா**

# இலங்கைக்கான கணக்கீடு

**இ**லங்கையில் நடைபெற்ற உள்நாட்டுப் போரின் இறுதி வருடங்களில் நடைபெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் சம்பந்தமான அறிக்கையை ஐ.நா. மனித உரிமைப் பேரவை வெளியிட்டிருக்கிறது. 2009இல் முடிவுக்கு வந்த இந்த மோதலின் கடைசி மாதங்களில் சுமார் 40,000 தமிழர்கள் இராணுவத்தால் கொல்லப்பட்டுள்ளனர். இதுபற்றிப் பிரஸ்தாபித்த பேரவையின் அறிக்கை, "பயங்கரமான அளவுக்கு மீறல்களும் துஸ்பிரயோகங்களும் நடைபெற்றுள்ளன" எனத் தெரிவித்துவிட்டு, "பல தசாப்தங்களாக நடைபெற்று வந்த மீறல்கள், தகாத நடைமுறைகள் மற்றும் நிறைவேற்றப்படாத வாக்குறுதிகள் என்பவற்றுக்கு முற்றுமுழுதான உள்நாட்டு நீதி விசாரணை முறை தீர்வாகாது என்ற பரவலான, நியாயமான சந்தேகம் எழுந்துள்ளது" எனக் குறிப்பிட்டுள்ளது. இது, அண்மையில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, தனது அரசாங்கம் உண்மை, நியாயம் மற்றும் நல்லிணக்கம் என்பவற்றுக்கான ஆணைக்குழு ஒன்றை அமைப்பதுடன், புதிய அரசியல் யாப்பு ஒன்றையும் அமைக்க உள்ளதாக ஐ.நா. மனித உரிமைப் பேரவைக்கு முன்வைத்த பிரேரணையை தெளிவாக நிராகரிக்கின்றது.

2009இல் தமிழ் கிளர்ச்சியை இராணுவ நடவடிக்கை மூலம் முடிவுக்குக் கொண்டு வந்த முன்னைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் காலத்தில், இலங்கை அரசாங்கம் சர்வதேச விசாரணைகளை நிராகரித்து வந்தது. இதனால் இலங்கையின் ஒத்துழைப்பு இன்றியே ஐ.நா. 2014 மார்ச்சில் தனது பணியை ஆரம்பித்தது. ஜனவரியில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் திரு.மகிந்த ராஜபக்ச தோற்கடிக்கப்பட்ட பின்னர், மைத்திரிபால சிறிசேனவின் புதிய அரசாங்கம், தேசிய நல்லிணக்கத்துக்கான திட்டங்களைக் கொண்டு வருவதற்காகவும், சர்வதேச விசாரணையாளர்களுடன் வேலை செய்வதற்காகவும், பேரவை தனது அறிக்கையை வெளியிடுவதைத் தாமதித்தது.

திரு.சிறிசேன, இன, மத பிரிவினைகளை நீக்குவதாக வாக்குறுதி அளித்துள்ளார். 1983இற்குப் பின்னர் முதலாவது தமிழர் என்ற வகையில், செப்ரெம்பர் 3இல் தமிழ் சிறுபான்மை இனத்தவரான இராஜவரோதயம் சம்பந்தன் பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். ஆனால் இலங்கையின் பொறுப்புக் கூறும் கடமையைக் கோரும் பல தமிழர்களும், ஏனையோரும், இலங்கை அரசாங்கமே தானாக விசாரணைகளை மேற்கொண்டு துஸ்பிரயோகத்தில் ஈடுபட்ட குற்றவாளிகளைத் தண்டிக்கும் என்றோ, சாட்சிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் என்றோ, நம்ப முடியாதவர்களாக தொடர்ந்தும் இருக்கின்றனர். 2009இல் இராணுவ நடவடிக்கைகளை மேற்பார்வை செய்த இரண்டு இராணுவ தலைவர்களான ஜகத் டயஸ் மற்றும் சரத் பொன்சேக ஆகியோர் முறையே இராணுவத் தலைமை அதிகாரியாகவும், பீலட் மார்சலாகவும் திரு.சிறிசேனவினால் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். வடக்கில் தமிழர்கள் தொடர்ந்தும் இராணுவ ஆக்கிரமிப்புக்குள் இருப்பதுடன், திரு.சிறிசேன அரசாங்கத்தின் கீழும் தொடர்ந்தும் அத்துமீறல்கள் நடைபெறுவதாகக் குற்றச்சாட்டுகளும் எழுந்துள்ளன.

ஐக்கிய நாடுகள் பேரவை தனது அறிக்கையில், சர்வதேச நீதிபதிகளையும், விசாரணையாளர்களையும் உள்ளடக்கி விசேட நீதிமன்றம் ஒன்றை அமைக்கும்படி கோரியுள்ளது. இது மட்டுமே குற்றம் புரிந்தவர்களை பொறுப்புக் கூறலுக்கு உட்படுத்தவும், பாதிக்கப்பட்டவர்கள் நீதியைப் பெறுவதற்குமான ஒரே வழியாகும். திரு.சிறிசேனவின் அரசாங்கம் அத்தகைய நீதிமன்றம் ஒன்று அமைவதற்கு தாமதமின்றி ஒத்துழைக்க வேண்டும்.

**(மேலே தரப்பட்டுள்ள பகுதி, The Newyork Times International Weekly செப்ரெம்பர் 26 – 27 திகதியிட்ட இதழின் ஆசிரிய தலையங்கமாகும் – தமிழில்: சாவித்திரி)**

முன்பக்கத்தொடர்ச்சி...

முறையில் உருவாக்கப்பட்ட ஒன்று என்பது இவ்விடத்தில் நினைவு கூரத்தக்கது)

அதன்பின்னர் இப்பொழுது இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் உள்ள மிகப்பெரிய பிரச்சினை, தமிழக மீனவர்களின் ஊடுருவல் பிரச்சினையாகும். இந்தப் பிரச்சினை மிகவும் சுலபமாகத் தீர்க்கக்கூடிய ஒரு பிரச்சினையாகும். அதாவது தமிழக மீனவர்கள் அடாவடித்தனமாக இலங்கையின் கடற்பரப்புக்குள் ஊடுருவி மீன்பிடிப்பதைத் தவிர்த்தால், இந்தப் பிரச்சினை தானாகவே தீர்ந்துவிடும். ஆனால் அவர்கள் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அவ்வாறு செய்ய மறுக்கிறார்கள்.

இதற்குக் காரணம், தமிழகத்தில் உள்ள பிரதான அரசியல் கட்சிகள்தான். இலங்கைக் கடற்பரப்பினுள் ஊடுருவும் பெரும்பாலான மீன்பிடிப்படகுகள், அங்குள்ள ஆளும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் திராவிட முன்னேற்றக் கழகம் என்பனவற்றுக்குச் சார்பான முதலாளிகளுக்குச் சொந்தமானவையாகும். எனவே, இலங்கைக் கடற்பரப்பினுள் ஊடுருவும் தமிழகப் படகுகளையும், மீனவர்களையும் இலங்கை கடற்படை கைப்பற்றிக் கைதுசெய்தால், அவ்விரு கட்சிகளும் கூப்பாடு போடுவதும், போராட்டங்கள் நடாத்துவதும், மத்திய அரசுக்கு தந்திகள் அனுப்புவதும் வழமையாக நடைபெறும் விடயங்களாக இருக்கின்றன.

அதற்கு இரண்டு விடயங்கள் காரணங்களாக இருக்கின்றன. ஒன்று, இலங்கை கடற்படையின் நடவடிக்கையால், தமக்கு சார்பான மீனவ முதலாளிகளின் வருமானம் பறிபோகிறது என்ற கவலை. இரண்டாவது, தமிழக கடற்கரை நீளத்துக்கு பரந்து வாழும் 10 இலட்சம் மீனவக் குடும்பங்களின் வாக்குகளை இந்தப் பிரச்சினையை வைத்து கவர்வது. அதனால் இரண்டு பிரதான கட்சிகள் மட்டுமின்றி, மீனவர்களின் வாக்குகளை மனதில் வைத்து இதர கட்சிகளும் இப்பொழுது 'கும்பலிலே கோவிந்தா' போட ஆரம்பித்துள்ளன. சர்வதேசியத்துவம் பேசும் கம்யூனிஸ்ட் கட்சிகள் கூட, சின்னஞ்சிறிய இலங்கையின், அதிலும் அந்த நாட்டின் வடபகுதியில் வாழும் தமிழ் பேசும் மீனவர்கள்தான் தமிழக மீனவர்களின் அத்துமீறலால் பாதிக்கப்படுகிறார்கள் என்பதைக் கவனத்தில் எடுக்காது, பிழைப்புவாத திராவிடக் கட்சிகளின் மொழியில் இந்தப் பிரச்சினையைத் தமது பத்திரிகைகளில் எழுதி வருகின்றன.

பல தடவைகள் தமிழக கடலோர காவற்படை அதிகாரிகளும், மத்திய அரசாங்க அமைச்சர்களும், இந்தப் பிரச்சினை உருவாவதற்கு தமிழக மீனவர்களின் அத்துமீறல்தான் காரணமென தெரிவித்து வந்த போதிலும், தமிழக அரசுகளும், அரசியல் கட்சிகளும் அதைச் சட்டைசெய்வதே இல்லை. தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் ஊடுருவி மீன்பிடிப்பது என்ற அநியாயத்தை மட்டும் செய்யவில்லை. எதிர்காலத்தில் எமது கடற்பரப்பில் மீன்வளமே இல்லாமல் போகும் அளவுக்கு தடைசெய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி, கடல் வளத்தை முற்றிலுமாக வாரிச் செல்லும் அக்கிரமத்தையும் செய்கின்றனர்.

இலங்கையில் மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசாங்கம் இருந்த காலங்களில், இலங்கை கடற்படை அத்துமீறும் தமிழக மீனவர்களைக் கைது செய்யும் போதெல்லாம், 'தமிழின கொலை வெறியன் ராஜபக்ச தமிழக மீனவர்களையும் திட்டமிட்டு கொலை செய்கிறான்' என்ற மாதிரி தமிழக அரசியல் கட்சிகளும், ஊடகங்களும் இனவாத அடிப்படையில் கூச்சலிட்டு வந்தனர். ஆனால் இப்பொழுது மகிந்தவின் ஆட்சி போய், மைத்திரி — ரணில் 'நல்லாட்சி' வந்த பின்னரும் ஊடுருவும் தமிழக மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுகிறார்களே? அப்படியானால் தற்போதைய இலங்கை அரசும் தமிழினக் கொலைவெறி பிடித்த அரசா? அதுமட்டுமின்றி, ஊடுருவும் தமிழக மீனவர்களை அவர்களது சகோதர இனத்தவர்களான வட பகுதி தமிழ் மீனவர்கள் தாமாகவே கைது செய்து பொலிசாரிடம் ஒப்படைக்கிறார்களே? கடலில் சில வேளைகளில் இருபகுதியிருக்கும் இடையில் மோதல்கூட நடைபெறுகிறதே? இதற்கு எந்த இனவாதச் சாயம் பூசப்போகிறார்கள்?

முன்னைய ஆட்சிக் காலத்தில் தமிழக மீனவர்களின் அத்துமீறலை, ஈழத்தமிழர்களின் ஏகப்பிரதிநிதி, உரிமைக்காவலன் என்றெல்லாம் தம்மைப் பீற்றிக் கொள்ளும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஒருபோதும் கண்டனம் செய்தது கிடையாது. அதேநேரத்தில், வட பகுதி மீனவர்கள் சார்பாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி போராட்டங்களை முன்னெடுத்தபோது, 'மகிந்தவின் எடுபிடியான டக்ளஸ், தொப்புள்கொடி உறவுகளான ஈழத்தமிழ் மீனவர்களையும் தமிழக மீனவர்களையும் மோத வைப்பதற்குப் பார்க்கிறார்' என கூட்டமைப்பினர் வசைபாடித் திரிந்தனர்.

இன்றும் கூட, தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் இந்தப் பிரச்சினையில் தமிழக மீனவர்களைக் கண்டிக்கவோ அல்லது வட பகுதி மீனவர்களுக்கு ஆதரவாகவோ இல்லை என்பதை சம்பந்தனின் நாடாளுமன்ற உரை தெட்டத் தெளிவாக்கியிருக்கிறது. அவரது உரையின் பிரகாரம், தமிழக மீனவர்கள் மட்டுமின்றி, இலங்கை மீனவர்களும் இந்தியக் கடற்பரப்புக்குள் ஊடுருவி மீன்பிடிப்பது போலவும், எனவே இரு பகுதியினரையும் கட்டுப்படுத்த இருநாட்டு கடற்படைகளினதும் கூட்டு ரோந்து நடவடிக்கை தேவை என்றும் கூறுகிறார்.

சம்பந்தனின் இந்தக் கூற்று, அப்பட்டமாக தமிழக மீனவர்களின் ஊடுருவலை மறைப்பதற்காகவும், பிரச்சினையைத் திசை திருப்புவதற்காகவும் சொல்லப்பட்ட மோசடிக்கதை. குற்றமிழைப்பவர்கள் தமிழக மீனவர்கள். அவர்களை இலங்கைக் கடற்பரப்புக்குள் ஊடுருவாமல் தடுப்பது இந்திய அரசின் (கடற்படையின்) கடமை. அதை மீறி ஊடுருவி வந்தால் நடவடிக்கை எடுக்க வேண்டியது இலங்கை அரசின் (கடற்படையின்) கடமை. அப்படியிருக்க கூட்டு ரோந்து எதற்காக? ஒருவேளை தனது 'தாய்நாடான' இந்தியாவின் மீதான பற்றால், அந்நாட்டின் கடற்படை ஆதிக்கத்தை இலங்கையின் இறைமைக்குள் ஊடுருவ வைக்க சம்பந்தன் ஆசைப்படுகிறாரோ என்னவோ?

உண்மையில் இந்தப் பிரச்சினையால் கடுமையாகப் பாதிக்கப்படுபவர்கள் இலங்கையின் வட பகுதியில் மீன்பிடித்தொழில் மூலம் தமது அன்றாட சீவனத்தை நடாத்தி வரும் தமிழ் பேசும் மீனவர்கள்தான். அவர்கள் ஏற்கெனவே 30 வருட இனவாதப் போரால் நீண்ட காலம் தமது தொழிலை இழந்து, வீடு வாசலை இழந்து, அகதிகளாக அலைந்து, பல உயிர்களைக் காவு கொடுத்து, அல்லோலகல்லோலப்பட்டவர்கள். 2009இல் மகிந்த அரசு புலிகளை பூண்டோடு ஒழித்துக்கட்டிய பின்னர்தான், வடக்கு கிழக்கு மீனவர்களின் வாழ்வில் மீண்டும் ஒளி பிறந்தது. புலிகள் ஒழிக்கப்படாமல் இருந்து, யுத்தம் தொடர்ந்திருந்தால் இன்றும் அவர்கள் வாழ்வு இருள் சூழ்ந்ததாகத்தான் இருந்திருக்கும்.

**தொடர்ச்சி 7ம் பக்கம் பார்க்க...**

# மரணங்கள்.... மரணங்கள்.... மரணங்கள்....

## டேவிட் ஐயா

"டேவிட் ஐயா" என பலராலும் அழைக்கப்பட்டு வந்த டாக்டர் டேவிட் 2015 ஒக்ரோபர் 11ஆம் திகதி தமது 92ஆவது வயதில் கிளிநொச்சியில் காலமானார். 1977இல் மலையகத்தில் இருந்து அகதிகளாக வடக்கு நோக்கி வந்த இந்திய வம்சாவழி தோட்டத் தொழிலாளர்களை வவுனியா பிரதேசத்தில் மீள் குடியேற்றம் செய்வதற்காக 'காந்தியம்' என்ற அமைப்பை நிறுவிச் செயற்பட்டதால், 'காந்தியம் டேவிட்' என்ற சிறப்புப் பெயரால் பின்னர் அழைக்கப்பட்டார்.

கட்டிடக்கலைஞரான டேவிட், 1956இல் எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கவால் 'சிங்களம் மட்டும்' சட்டம் கொண்டுவரப்பட்ட பின்னர், இலங்கையில் தான் வகித்து வந்த உத்தியோகத்தை விட்டு வெளியேறி, பின்னர் அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, நைஜீரியா, கென்யா ஆகிய நாடுகளில் பணி புரிந்தார். பின்னர் இலங்கை திரும்பி காந்தியத்தை ஆரம்பித்துப் பணி புரிந்தார்.

இந்தக் காலகட்டத்தில் ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம், தமிழ் இளைஞர்களின் தனிநாட்டுப் போராட்டத்தை ஒடுக்குவதற்காக பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அமுல் செய்தது. டேவிட் அதற்கு எதிரான பிரச்சாரங்களில் தீவிரமாக ஈடுபட்டார். அதனால் ஜே.ஆர். அரசு அவரைக் கைதுசெய்து வெலிக்கடைச் சிறையில் அடைத்து வைத்தது.

1983 யூலை 23ஆம் திகதி புலிகள் திருநெல்வேலியில் கண்ணி வெடி வைத்து 13 இலங்கை இராணுவத்தைக் கொலை செய்ததைத் தொடர்ந்து, அரச ஆதரவுடன் தென்னிலங்கையில் வாழ்ந்த தமிழர்கள் மீது வன்முறை கட்டவிழ்த்துவிடப்பட்டு பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டனர். அந்த வன்செயலின் ஒரு அங்கமாக, வெலிக்கடையில் இருந்த தமிழ் கைதிகள் இரு நாட்களாகக் கொலை செய்யப்பட்டனர். (காந்தியத்தில் பணி புரிந்த டாக்டர் இராஜசுந்தரம், மற்றும் ரெலோ இயக்க தலைவர்கள் குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன் ஆகியோரும் பலியானார்கள்) அதில் உயிர் தப்பியவர்களில் டேவிட் ஐயாவும் ஒருவர். பின்னர் தமிழ் கைதிகள் மட்டக்களப்புக்கு இடம் மாற்றப்பட்டிருந்த வேளையில், ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்தின் முயற்சியால் சிறை உடைக்கப்பட்டு, கைதிகள் எல்லோரும் இந்தியா கொண்டு செல்லப்பட்டனர்.

அதன்பின்னர் நீண்ட காலம் தமிழகத்தில் வாழ்ந்த டேவிட ஐயா, அண்மையில்தான் இலங்கை திரும்பி கிளிநொச்சியில் தங்கியிருக்கும் போது மரணமானார்.

சரியோ பிழையோ, தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் உட்பட பல போலித் தமிழ் தேசியவாதிகள் போலல்லாது தமது இறுதிக்காலம் வரை, டேவிட் அவர்கள் நிலை தளும்பாத ஒரு உறுதியான, நேர்மையான தமிழ் தேசியவாதியாகவே வாழ்ந்து மரணித்துள்ளார்.

## தமிழினி

புலிகள் அமைப்பின் முன்னாள் மகளிர் அணிப் பொறுப்பாளர் தமிழினி (சிவகாமி ஜெயக்குமார்) 2015 ஒக்ரோபர் 18ஆம் திகதி தமது 43ஆவது வயதில் பரந்தனில் காலமானார். புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த அவர், மகரகம புற்றுநோய் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தபோதிலும், சிகிச்சை பலனின்றி மரணமானார்.

மிகவும் வறுமையான குடும்பத்தில் பிறந்து வளர்ந்த தமிழினி கல்வியில் மிகவும் சிறந்தவராக இருந்த போதிலும், பல ஏழைத் தமிழ் இளைஞர் யுவதிகளைப் போல, சில நிர்ப்பந்த சூழ்நிலைகளால் புலிகள் இயக்கத்தில் இணைந்து, தமது ஆளுமையால் மகளிர் பொறுப்பாளர் வரை உயர்ந்த ஒருவராவார்.

ஆனால், புலிகள் இயக்கத்தில் இணைந்து கொண்ட பலர், தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி பெருவாரியான சொத்துக்களைச் சேகரித்து, ஆடம்பர வாழ்வில் ஈடுபட்டபோதும், தமிழினி அப்படிச் செய்யவில்லை. எப்படி 50 ஆண்டுகளுக்கு முன்னர் பரந்தன் இரும்பு மதவடியில் அவரது தகப்பனார் சிவசுப்பிரமணியம் ஒரு இரவல் காணியில் குடிசை கட்டி வாழ்ந்தாரோ, அதேபோல தமிழினி இறக்கும் நேரத்திலும் பரந்தன் – முல்லைத்தீவு வீதியில், பரந்தனுக்கு அண்மித்ததாக உள்ள ஓராங்கட்டை என்ற இடத்திலுள்ள ஒரு ஓலைக் அதிலேயே குடிசையிலேயே வாழ்ந்துள்ளார். தமிழினியின் மரணச்சடங்கும் நடைபெற்றது. தமிழினி புலிகள் அமைப்பில் பொறுப்பான பதவியில் இருந்தும், புலிகளின் வெளிநாடுகளுக்குப் பேச்சுவார்த்தைக்குச் சென்ற குழுக்களில் இடம் பெற்றிருந்தும், தனக்கென சொத்துகள் எதையும் சேர்க்கவில்லை.

இறுதி யுத்தத்தின் பின்னர் 2009.ல் இராணுவத்தால் கைது செய்யப்பட்ட தமிழினி, புனர்வாழ்வளிக்கப்பட்ட பின்னர், 2013இல் விடுதலை செய்யப்பட்டார். அதே ஆண்டில் லண்டனைச் சேர்ந்த ஜெயக்குமார் என்ற ஈழத்தமிழர் அவரைத் திருமணம் செய்தார். ஆனால் இரு வருடங்களிலேயே அவர் புற்றுநோயால் மரணத்தைத் தழுவிக் கொண்டார்.

அவர் இறந்தும் கூட, அவரை வைத்து அரசியல் பிழைப்பு நடாத்துவதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் போலி தமிழ் தேசியவாதிகள் அவரது மரணச்சடங்கின் போது முண்டியடித்ததைப் பார்த்து, அவரது அயல் பிரதேச மக்கள் முகம் சுழித்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

## 'ஆச்சி ' மனோரமா

நாம் எமது 'வானவில்' சென்ற இதழில் (செப்ரெம்பர்) குறிப்பிட்டிருந்ததைப் போல, தென்னிந்திய சினிமா உலகில் "ஆச்சி" என எல்லோராலும் அன்புடன் அழைக்கப்பட்ட பிரபல நகைச்சுவை நடிகை மனோரமா 2015 ஒக்ரோபர் 10இல் தமது 78 ஆவது வயதில் காலமாகிவிட்டார்.

மிகவும் வறுமைப்பட்ட குடும்பத்தில் பிறந்து, தகப்பன் இல்லாது தாயின் அரவணைப்பில் மட்டும் வாழ்ந்த சிறுமி மனோரமா, தமது 10ஆவது வயதிலேயே நாடகக் கம்பனிகளில் சேர்ந்து சிறு பாத்திரங்களில் நடிக்கத் தொடங்கி, பின்னர் மிகப் பிரபலமான திரை நட்சத்திரமானார். அவர் தமது 72 வருட நடிப்புலக வாழ்வில் 1500 திரைப்படங்களிலும், 1000 ஆயிரம் மேடை நாடகங்களிலும் (Wikipedia தகவலின்படி 5000 மேடை நாடகங்களில்), பல தொலைக்காட்சித் தொடர்களிலும் நடித்து சாதனை புரிந்துள்ளார்.

அத்துடன், தமிழகத்தின் 5 முதலமைச்சர்களான சி.என்.அண்ணாத்துரை, மு.கருணாநிதி, எம்.ஜி.இராமச்சந்திரன், வி.ஜானகி, ஜெயலலிதா ஆகியோருடன் சேர்ந்து நடித்த பெருமையும் அவர் ஒருவருக்கே உண்டு. *